24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 228 ஆனி 30 ஆம் நாள் | திங்கட்கிழமை 15 ஜூலை 2019 | வள்ளுவர் ஆண்டு 2050



# சாவுத் தண்டனையை நீக்கும் தினத்தை தேசிய துக்கதினம் என அறிவிப்பேன்!

## அரசதலைவரும் விடாப்பிடி

கொழும்பு, ஜூலை 15

சாவுத் தண்டனையை நீக்கும் சட்டத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்தால் அது போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கும் பாதாள உலகத்தினருக்கும் பாலியல் துர்நடத்தைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கும் வாய்ப்பாக அமையும். அவர்களிடத்தில் நாட்டை ஒப்படைப்பதாகவும் அமையும். அப்படி ஏற்பட்டால் அந்தத் தினத்தை நாட்டின் தேசிய துக்க தினமாக அறிவிப்பேன் என்று தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. 21

## மூடிமறைக்கப்பட்டுள்ள உண்மைகளை தெரிவுக்குழுவில் அம்பலப்படுத்துவேன்

### திருமலையில் ரணில் பகிரங்க அறிவிப்பு

திருகோணமலை, ஜூலை 15

'உயிர்த்தஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியை நாம் அறிந்துவிட்டோம். நாடாளுமன்றத் தெரிவுக்குழு இருக்கின்றது. அங்கு சென்று 21

## இங்கிலாந்து உலகச் சம்பியன் நியூசிலாந்து விடாப் போராட்டம்



## யாழுக்கு இன்று வருகிறார் ரணில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ்ப்பாணத் துக்கு 21

## 'வடமராட்சி களப்பு' திட்டத்தை நேற்று நேரில் ஆராய்ந்த மனோ

வடமராட்சி, ஜூலை 15

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் குடிதண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்கும் முகமாக முன்மொழியப்பட்டுள்ள வடமராட்சி களப்பு செயற்திட்ட அலுவலகத்துக்கு அமைச்சர் மனோ கணேசன், ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோர் நேற்றுப் 21

## விபத்தில் சிப்பாய் சாவு

முல்லைத்தீவு, ஜூலை 15

முல்லைத்தீவு - கேப்பாபிலவுப் பகுதியில் இராணுவ வாகனமொன்று நேற்று 21

## சிங்களவர்களுடன் முகத்துக்கு முகம் நின்று தன்மான முரசு கொட்டியவர் அமிர்தலிங்கம்

### சரவணபவன் எம்.பி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 15

1956ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் 'சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி' என்று சட்டம் கொண்டு வரப்பட்ட போது, தமிழ் இளைஞர்கள் ஒருபோதும் அதனை ஏற்க மாட்டார்கள் என்று எதிர்த்து முழங்கியவர் அமிர்தலிங்கம். 'சிங்கள மொழியை உங்கள் தொண்டைக்குள் திணிப்போம்' என்று சிங்களவர் வெறியுடன் பேசியபோது 'அதனை உங்கள் முகத்திலேயே திருப்பித் 21

## பிரபாகரனின் நிழலைக்கூடக் காணாதவர்கள் இப்போதெல்லாம் அதிகமாகப் பேசுகிறார்கள்

### வரலாற்றை எழுதுவேன் என்கிறார் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஜூலை. 15

தம்பி பிரபாகரனின் நிழலைக்கூடத் தரிசிக்காதவர்களெல்லாம் இப்போது அதிகமாகப் பேசுகிறார்கள் என்று தெரிவித்த தமிழ் அரசுக்கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா, என்னால் வரலாற்றை எழுத முடியும் என்றும் குறிப்பிட்டார்.

வலி.மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற அமிர்தலிங்கத்தின் 02



## மைத்திரிக்கு ஏற்பதான் செயற்படுகின்றார் சஜித்

### அவரை நம்பவே முடியாது என்கிறார் பொன்சேகா

கொழும்பு, ஜூலை 15

'அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படுகின்ற அமைச்சர் 21

## அரச தலைவர் தேர்தலில் ஐ.தே.க. துண்டுதுண்டாக உடைவது உறுதி

### அடித்துக் கூறுகின்றது மகிந்த அணி மைத்திரிக்கு எதிராகவும் போர்க்கொடி

கொழும்பு, ஜூலை 15

'நாட்டில் விரைவில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் ஐக்கியத் தேசியக் கட்சி துண்டுதுண்டாக 21

## அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிப்பு

கொழும்பு, ஜூலை 15

அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல், மோசடி ஆகியவற்றை ஆராய்வதற்காக, நியமிக்கப்பட்டுள்ள அரசதலைவர் விசாரணை ஆணைக்குழுவின் பதவிக் காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப் பட்டுள்ளது.

குறித்த ஆணைக் 21



## பிரபாகரனி...

நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் போராட்ட வரலாற்றைக் கூறிய மாவை சேனாதிராசா, அவருடன் சேர்ந்து இயங்கிய சம்பவங்களையும் பதிவு செய்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: அமிர்தலிங்கம் இந்தியாவில் இருந்தபோது அனுப்பிய கடிதம் ஒன்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டதால் சிறைசெல்ல நேரிட்டது. அது தொடர்பில் மயிலிட்டி துறைமுகத்துக்கான நிகழ்வில் கலந்து கொண்ட அரச தலைவரிடமும் நான் தெரிவித்தேன். அமீரண்ணன் தம்பியைச் (பிரபாகரன்) சந்தித்தார் என்பது அவர் எவ்வளவு தூரம் அவர்களை நேசித்தார் என்பதையும், அவர்களை ஊக்கப்படுத்தினார் என்பதையும் அறியமுடியும். அவர் இந்தியாவில் இருக்கும் போதும் அவர்ளை ஊக்கப்படுத்தினார். ஆனால் காலம் தவறாகக் கையாளப்பட்டிருக்கிறது. அல்லது இன்றுவரையும் அவர் இந்த இயக்கத்தை கொண்டு நடத்தியிருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்திருக்கும். பலருக்கு அது தெரியாது எனக்குத் தெரியும். என்னால் வரலாற்றை எழுதமுடியும். எல்லாவற்றையும் எழுதுவது கடினமாக இருக்கிறது. அந்த வரலாற்றை வலியுறுத்தி சொல்லச் சொல்கிறார்கள் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். புலிகள் இயக்கத்துடன் நாங்கள் எப்படி இயங்கினோம் என்பதை நான் இப்போது சொல்லப்போனால் நாடு தாங்கிக் கொள்ளுமோ தெரியாது. ஆனால் சொல்லித்தான் ஆகவேண்டும். நான் சென்ற மாதத்திலே பழநெடுமாறனைச் சந்தித்தபோது, அவரும் அந்த விடயங்களை எழுதித்தான் ஆகவேண்டும் என்று வற்புறுத்தினார். ஆனபடியால் வரலாறுகளைத் திரித்து மறந்து குற்றஞ்சுமத்தி, பிரபாகரனுடைய நிழலைக்கூடத் தரிசிக்காதவர்கள், தெரியாதவர்கள், காணாதவர்கள் எல்லாம் இப்போது அதிகமாகப்பேசுகிறார்கள் - என்றார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்பற்றி அறிந்திருந்தும் மைத்திரிபால சிறிசேன மௌனமாக இருந்தார். இனக் குரோதங்களால் அன்றுதொடக்கம் இன்றுவரை குருதி சிந்தியே பயணிக்க வேண்டியுள்ளது - என்றும் மாவை குறிப்பிட்டார். (ம-21)

கோடிபதி ஷனிதா

சீட்டிழுப்பு வாரம்: 467 சீட்டிழுப்பு திகதி: 2019.07.12

வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை

D 41 46 67 73

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▸ 1004
சீட்டிழுப்பு திகதி ▸ 2019.07.13 சனிக்கிழமை

N 09 12 36 69

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்

திகதி 14.07.2019 | வெற்றி வாரம் 2560 | வர்ணம் ஊதா

கடகம்

வெற்றி இலக்கங்கள் 23 39 43 49

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,652,870 /=

16.07.2019 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்

### நடராசா சிவசோதி



காரைநகரைப்பிறப்பிடமாகவும் பெருங்குளம் சந்தி சாவகச்சேரியில் வசித்தவரும் தற்போது பொன்னர் ஒழுங்கை மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவசோதி நேற்று (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர் (மீசாலை)
077 893 5297

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 669
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.07.14

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,937,095/-

வெற்றி இலக்கங்கள் 05 21 42 49 ஆங்கில எழுத்து T

அபிவிருத்தி லொத்தர் சபை
0114 825 825

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




எமது பாடசாலையில் அளப்பெரிய சேவை புரிந்த எமது தமிழ் ஆசான்
தேசகீர்த்தி

### உயர்திரு.ஞான.திருக்கேதீஸ்வரன் (JP)

அவர்களுக்குப் பாடசாலைச் சமூகம் நாம் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

தலைமையெனும் மகுடம் பூண்டு
சேவை பல புரிந்த உமக்கு
அருள்வரம் பல கிடைத்திடவே
நாவாற யாம் வாழ்த்துகின்றோம்.....

Best Wishes

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி

(CS/26669)(11,17)

## எம் நேச தந்தைக்கு கண்ணீர் அஞ்சலி

### அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதன்

(கியூடெக் நிறுவனத்தின் முன்னையநாள் இயக்குனர்)

குருவாக 06.04.1970



மண்ணில் 14.12.1945 | விண்ணில் 11.07.2019

அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதனுடைய ஆன்மா தூயவர்களின் கூட்டத்திலே சங்கமமாகி அமைதியடைய எம் இதயத்தின் அடித்தளத்திலே இருந்து எம் இதய அஞ்சலிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கியூடெக் கரித்தாஸ் வன்னி குடும்பம்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 02 . 1964



இறப்பு 14 . 07 . 2019

### செல்வராசா தயானந்தன்

கோண்டாவிலை வசிப்பிடமாக கொண்ட செல்வராசா தயானந்தன் நேற்று (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராசா கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் நகுலேஸ்வரியின் பாசமிகு கணவரும் ஹம்சாரிணி, சாஹித்தியன், ஜெகதாரிணி, கம்சவர்தனன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## பெறுகை அறிவித்தல்

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)– 2019**
**சபைநிதி வேலைத்திட்டம் - 2019**
**நகராட்சி மன்றம் - சாவகச்சேரி**

1. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 2019.05.08 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை, CIDA தர முன்னுரிமை என்பன கருத்தில்கொள்ளப்படும்.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0041, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2019.07.15 ஆம் திகதியிலிருந்து 2019.07.30 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து 2019.07.15 ஆம் திகதியிலிருந்து 2019.07.30 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 2019.07.30 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப் படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2019.09.17) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat, நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG)– 2019 | | | | | | |
| NP/14/41(3)2/PSDG/01/2019 | வேதாந்த மடம் வீதி புனரமைப்பு | 0.991 | 02 மாதம் | C9/C8 | 9,950.00 | 2019.10.15 |
| NP/14/41(3)2/PSDG/02/2019 | வீரபத்திரர் வீதி புனரமைப்பு | 1.659 | 02 மாதம் | C9/C8 | 16,600.00 | 2019.10.15 |
| NP/14/41(3)2/PSDG/03/2019 | கச்சாய் வீதி இரண்டாம் வீதி புனரமைப்பு | 0.382 | 02 மாதம் | C9/C8 | 3,900.00 | 2019.10.15 |
| சபைநிதி வேலைத்திட்டம் - 2019 | | | | | | |
| NP/14/41(3)2/CF/03/2019 | மீசாலை பொதுநூலக மதில் அமைத்தல் | 0.670 | 02 மாதம் | C9/C8 | 6,700.00 | 2019.10.15 |
| NP/14/41(3)2/CF/04/2019 | சாவகச்சேரி பொதுநூலக நூலரின் அறை அமைப்பு | 0.173 | 02 மாதம் | C9/C8 | 1,800.00 | 2019.10.15 |

10. கேள்விகோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2019.07.24 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
**பெறுகைக்குழு,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**
**2019.07.15**



# கடும் மழை - நிலச்சரிவு நேபாளத்தில் 43பேர் சாவு



காத்மண்டு,ஜூலை 15

நேபாளத்தில் கடும் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் மக்களில் பலரும் பாதிக்கப்பட்டனர். பின்னர் இந்த மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 43பேர் சாவடைந்தனர்.

நேபாளத்தில் கடந்த சில நாள்களாகக் கடும் மழை பெய்கிறது.

மழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. நேபாளத்தின் தலை நகர் காத்மாண்டுவில் உள்ள முல்பானி பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 17 பேர் சாவடைந்தனர். 6 பேர் காணாமல் போயினர்.

மேலும் நாட்டின் பல பகுதிகளில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மழை மற்றும் மண்சரிவு காரணமாகப் பல இடங்களில் தொடருந்து விபத்துகள் ஏற்பட்டன. காத்மண்டுவைச் சுற்றிய மழை மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் 43பேர் சாவடைந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதாக அந்த நாட்டு இராணுவத் தரப்புத் தெரிவித்தது. மீட்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுவரும் இராணுவம் மக்களை அச்சம் கொள்ள வேண்டாம் என்றும் தெரிவித்துள்ளது.

# ஈரானுக்குப் பதிலடி கொடுப்பதற்காக போர்க்கப்பலை அனுப்பும் பிரிட்டன்

லண்டன்,ஜூலை 15

ஈரானுடனான உறவில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், வளைகுடாவுக்குத் தனது மற்றொரு போர்க்கப்பலை அனுப்புகின்ற திட்டத்தைப் பிரிட்டன் முன்னெடுத்துள்ளது.


இதன்படி தற்போது, மத்திய தரைக்கடல் பகுதியில் இருக்கும் பிரிட்டனின் 'எச்.எம்.எஸ் டன்கன்' என்கிற போர்க் கப்பல் அடுத்த வாரம் வளைகுடாவை அடைந்து அங்குள்ள 'எச்.எம்.எஸ் மென்ட்ரோஸ்' போர்க் கப்பலுடன் பாதுகாப்புப் பணியில் இணைய இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமையன்று, பிரிட்டனுக்குச் சொந்தமா 'பிரிட்டிஷ் ஹெரிட்டேஜ்' என்கிற எண்ணெய்க் கப்பலை அணுகிய ஈரானின் மூன்று படகுகளால், பிரிட்டனின் போர்க்கப்பலான 'எச்.எம்.எஸ். மென்ட்ரோஸ்' குறித்த ஈரானின் படகுகளுக்கும், எண்ணெய்க் கப்பலுக்கும் இடையில் பயணித்துப் பிரிட்டனின் எண்ணெய்க் கப்பலுக்குப் பாதுகாப்பளித்தது. இதைத் தொடர்ந்தே, அந்தப் பகுதிக்கு இரண்டாவது போர்க்கப்பலை அனுப்புவதற்குப் பிரிட்டன் திட்டமிட்டுள்ளது.

அதேசமயம், கடந்த வாரம் ஜிப்ரால்டர் கடற்பகுதியில் பிரிட்டன் கைப்பற்றிய தமது எண்ணெய்க் கப்பலை விடுவிக்குமாறு பிரிட்டனை ஈரான் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இந்த ஆபத்தான விளையாட்டில் பிரிட்டன் தலையிட வேண்டாம் என்று ஈரானிய அரசு தொலைக்காட்சியில் ஈரானின் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆஸ்திரேலியாவில் நிலநடுக்கம்



மெல்போர்ன், ஜூலை 15

ஆஸ்திரேலியாவின் புரூம் நகரில் நேற்றுக் காலை 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. புரூம் நகரின் மேற்கே சுமார் 210 கிலோ மீற்றர் தொலைவில் நேற்றுக் காலை இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதை ஐரோப்பிய மத்திய தரைப்பகுதி நிலநடுக்கவியல் மையம் உறுதிப்படுத்தியது. நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை.




BACHOLOR OF INFORMATION TECHNOLOGY

தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வ தேச ரீதியிலும் உள்நாட்டிலும் U.G.C அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்பாகும். இரண்டு கல்வி ஆண்டுகள் கொண்ட இக் கற்கை நெறியின் ஒரு கல்வி ஆண்டு இரண்டு Semester களை கொண்டதாகும். இக் கற்கைநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள் நாட்டிலோ வெளிநாட்டிலோ உயர் ஊதியத்துடன் தொழில்வாய்ப்பு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது உலகின் தலைசிறந்த பல் கலைக்கழகம் ஒன்றில் பட்ட மேற் படிப்பு கற்கை நெறி ஒன்றை தொடர்வதற்கும் அமையும்



BACHOLOR OF INFORMATION TECHNOLOGY
TOP-UP DEGREE
(1 YEAR)

அரச அல்லது அரச அனுமதிபெற்ற தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் உயர் தேசிய டிப்ளோமா (H.N.D) அல்லது இதற்கு நிகரான கல்வித் தகைமை உடைய மாணவர்கள் Bacholor of Information Techology பட்டப்படிப்பில் மூன்றாம் வருடத்திற்கு நேரடியாக உள்வாங்கப்படுவார்கள். (அதாவது மூன்று வருடகால பட்டப்படிப்பின் முதல் இரண்டு வருடகாலங்கள் விதிவிலக்கு. exemption வழங்கப்படும்.

(C/10630)(10)

மேற்படி பட்டப்படிப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

உடன் அழையுங்கள்
0777174443

www.blccampus.edu.lk

BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

LINCOLN UNIVERSITY COLLEGE

Recognized by:
MQA

## தவறிவிட்டது

சாவகச்சேரியிலிருந்து மட்டுவிலுக்குச் செல்லும் வழியில் நேற்று **14.07.2019** தங்கக் காப்பு தவறிவிட்டது.
கண்டெடுத்தவர் ஒப்படைக்கவும்.
**சன்மானம் வழங்கப்படும்.**

**076 016 4614**

## கண்ணீர் அஞ்சலி

எமது கோவில் பொருளாளர் தர்மநாயகம் அவர்களின் மனைவி **பூவா** அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மனம் உடைந்ததுடன் அன்னாரின் மறைவினால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய **மஞ்சத்தடி இணுவில் முருகனை** பிரார்த்திக்கின்றோம்.

**மூர்த்தி ஐயா குடும்பத்தினர்**

## ES Printers

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## LOLC FINANCE PLC

LOLC FINANCE

# Gigantic Motor Vehicle Auction Sale

**On Thursday 18th July 2019**



TO BE HELD AT
**NO. 363, MANNAR ROAD, VEPPANKULAM, VAVUNIYA.**
Commencing 10.00 a.m Onwards

### FOUR WHEEL TRACTOR

| | | | | |
|---|---|---|---|---|
| HOLLAND 4710 | 2700CC | 2016 | RE | XXXX |
| HOLLAND 4710 | 2700CC | 2016 | RE | XXXX |
| JOHN DEERE 3036E | 1642CC | 2017 | RF | XXXX |
| JOHN DEERE 5047D | 2900CC | 2019 | RD | XXXX |
| SONALIKA DI 50 | 2893CC | 2017 | RF | XXXX |
| TAFE 45 DI | 2500CC | 2010 | RB | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2008 | RA | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2010 | RB | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2015 | RD | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2017 | RF | XXXX |
| TAFE 45DI | 2500CC | 2016 | RF | XXXX |

### HARVESTER

| | |
|---|---|
| MUBOTA COMBINE HARVESTER-CLASSIC | XXXX |

### MOTOR BICYCLE

| | | | | |
|---|---|---|---|---|
| BAJAJ CT100 | 100CC | 2015 | BCC | XXXX |
| BAJAJ DISCOVER | 102CC | 2014 | BBF | XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2013 | BAK | XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2014 | BBA | XXXX |
| BAJAJ DISCOVER | 125CC | 2015 | BBY | XXXX |
| BAJAJ PLATINA | 100CC | 2013 | BAN | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2016 | BDM | XXXX |
| BAJAJ PLATINA | 102CC | 2016 | BDL | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2013 | BAL | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | BCR | XXXX |
| BAJAJ PULSAR | 134CC | 2013 | BAJ | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2012 | XZ | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2012 | BFC | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2013 | BAQ | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2015 | BCP | XXXX |
| BAJAJ PULSAR | 135CC | 2015 | BCE | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | BAQ | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2013 | BAP | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | BBY | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | BBU | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2014 | BBH | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | BDA | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | BDE | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2015 | BCO | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | BDX | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2016 | BEI | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2017 | BEW | XXXX |
| BAJAJ PULSAR | 150CC | 2017 | BFN | XXXX |
| BAJAJ PULSAR | 180CC | 2015 | BCL | XXXX |
| BAJAJ PULSAR | 180CC | 2017 | BFP | XXXX |
| BAJAJ PULSAR | 199CC | 2018 | BHA | XXXX |
| BAJAJ V-15 | 150CC | 2016 | BEG | XXXX |
| DEMAK CIVIC | 110CC | 2016 | BFT | XXXX |
| DEMAK DTM150 | 150CC | 2017 | BFY | XXXX |
| DEMAK DTMI50 | 150CC | 2017 | BFO | XXXX |
| HERO DASH VX | 110CC | 2016 | BEW | XXXX |
| HERO DASH VX | 110CC | 2015 | BDD | XXXX |
| HERO DASH VX | 110CC | 2015 | BDB | XXXX |
| HERO DASH VX | 110CC | 2016 | BDV | XXXX |
| HERO DASH | 110CC | 2016 | BDV | XXXX |
| HERO GLAMOUR | 124CC | 2015 | BCN | XXXX |
| HERO GLAMOUR | 124CC | 2Q16 | BDW | XXXX |
| HERO GLAMOUR | 124CC | 2016 | BEQ | XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2013 | BDB | XXXX |
| HERO GLAMOUR | 125CC | 2015 | BDF | XXXX |
| HERO HF DELUXE CAST | 100CC | 2017 | BFP | XXXX |
| HERO HUNK | 150CC | 2016 | BEV | XXXX |

### MOTOR BICYCLE

| | | | | |
|---|---|---|---|---|
| HERO KARIZMA | 223CC | 2015 | BFH | XXXX |
| HERO MAESTRO | 110CC | 2017 | BGB | XXXX |
| HERO PLEASURE | 100CC | 2014 | BBN | XXXX |
| HERO PLEASURE | 102CC | 2017 | BFV | XXXX |
| HERO TWISTER | 110CC | 2013 | BAR | XXXX |
| HERO XTREME SPORTS | 150CC | 2015 | BDO | XXXX |
| HONDA ACTIVA I | 109CC | 2013 | BAM | XXXX |
| HONDA CB TRIGGER | 150CC | 2014 | BBB | XXXX |
| HONDA CD DREAM | 110CC | 2016 | BFO | XXXX |
| HONDA DIO | 109CC | 2016 | BDP | XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | BGG | XXXX |
| HONDA DIO | 110CC | 2017 | BET | XXXX |
| HONDA DIO | 110CC | 2018 | BGG | XXXX |
| HONDA DIO | 110CC | 2018 | BGH | XXXX |
| HONDA NAVI | 110CC | 2017 | BFO | XXXX |
| MAHINDRA ROCKSTAR | 110CC | 2017 | BFQ | XXXX |
| SUZUKI GS150R | 150CC | 2015 | BDT | XXXX |
| TVS APACHE | 150CC | 2017 | BGF | XXXX |
| TVS APACHE RTR | 180CC | 2012 | BAW | XXXX |
| TVS APACHE | 150CC | 2018 | BGO | XXXX |
| TVS APACHE | 180CC | 2015 | BDQ | XXXX |
| TVS METRO LIGHT | 100CC | 2014 | BAY | XXXX |
| TVS METRO | 100CC | 2014 | BBV | XXXX |
| TVS SCOOTY PEP | 90CC | 2015 | BCN | XXXX |
| TVS SCOOTY PEP+ | 90CC | 2017 | BEZ | XXXX |
| TVS SCOOTY ZEST | 110CC | 2015 | BCT | XXXX |
| TVS WEGO | 110CC | 2015 | BEI | XXXX |
| TVS WEGO | 110CC | 2016 | BFA | XXXX |
| TVS XL SUPER HD | 70CC | 2017 | BFI | XXXX |
| YAMAHA ALPHA | 113CC | 2015 | BCX | XXXX |
| YAMAHA FAZER | 153CC | 2011 | WY | XXXX |
| YAMAHA FAZER | 153CC | 2014 | BBV | XXXX |
| YAMAHA FAZER | 153CC | 2016 | BEV | XXXX |
| YAMAHA FZ-S | 150CC | 2015 | BCO | XXXX |
| YAMAHA RAY | 113CC | 2013 | BAS | XXXX |
| YAMAHA RAY | 113CC | 2014 | BBT | XXXX |
| YAMAHA RAY-ZR | 113CC | 2017 | BFT | XXXX |
| YAMAHA RAY-ZR | 113CC | 2017 | BGC | XXXX |
| YAMAHA SALUTO | 125CC | 2017 | BFV | XXXX |
| YAMAHA SALUTO | 125CC | 2015 | BDN | XXXX |

### LORRY

| | | | | |
|---|---|---|---|---|
| LANKA ASHO LEYLAND | 6000CC | 1995 | 47 | XXXX |

### THREE WHEELER

| | | | | |
|---|---|---|---|---|
| BAJAJ | 145CC | 2006 | QJ | XXXX |
| BAJAJ | 145CC | 2002 | GV | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | QA | XXXX |
| BAJAJ | 145CC | 2005 | QB | XXXX |
| BAJAJ | 145CC | 2006 | QF | XXXX |
| BAJAJ | 150CC | 2003 | HA | XXXX |
| BAJAJ | 150CC | 2004 | JG | XXXX |
| BAJAJ | 173CC | 2007 | QL | XXXX |
| BAJAJ | 174CC | 2007 | QL | XXXX |
| BAJAJ | 174CC | 2007 | QK | XXXX |
| BAJAJ | 174CC | 2008 | QO | XXXX |
| BAJAJ | 174CC | 2010 | YC | XXXX |
| BAJAJ | 198CC | 2011 | YO | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | AAA | XXXX |
| BAJAJ | 198CC | 2012 | AAA | XXXX |
| BAJAJ | 198CC | 2014 | AAR | XXXX |
| BAJAJ | 200CC | 2010 | YE | XXXX |

### VAN

| | | | | |
|---|---|---|---|---|
| TOYOTA HIACE | 2770CC | 1993 | 252 | XXXX |

## On View – 15th ,16th & 17th July 2019

Between 9.00 a.m – 5.00 p.m

**Conditions of Sale**

- ✓Entrance: By a non refundable Ticket of Rs. 500.00 per person & a refundable deposit of Rs. 5,000.00 per person on the day of Auction.
- ✓Payment: **Non – refundable** initial deposit of 25% in Cash at the fall of the Hammer & Balance 75% & Removal latest by 3:00 pm on Friday 26th July 2019 to be paid to LOLC Finance PLC No.27, 2nd Cross Street, Vavuniya.
- ✓The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.
- ✓The decision of the Auctioneer will be final.

## SCHOKMAN & SAMERAWICKREME

*One Country. One Auctioneer.* *Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom:
6A, Fairfield Gardens, Colombo 08.
Tel: 011 2502680, 2585408,
Tel / Fax: 011 2588176
Email: schokman@samera1892.com

web:www.sandslanka.com

## கண்ணீர் அஞ்சலி

### அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளார்



உயர்திரு பத்திநாதன் அன்னரத்தினம் தம்பதிகளின் ஐந்தாவது மகனாய்ப் பிறந்து. அழகான மகனை குருவாகத் திருச்சபைக்கு ஈந்திட. அருட்பணியாளராகி ஒப்பற்ற பணிகளை ஆற்றிய பாசமிகு தந்தையே! உம் இறப்பு செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்து ஆறாத் துயரில் மூழ்கியுள்ளோம். பாசமிகு பெற்றோரின் பிறந்த தின நினைவை உடன் பிறப்புகளுடன் திருப்பலி நிறை வேற்றி நீரே.

நினைவுகள் ஒரு ஆண்டு நிறைவினில்
அந்தோ! மின்னலென மறைந்தீரோ!
விண்ணகம் சென்றது துன்புறுவோரின் துயர் துடைக்கவோ!

இவர் இழப்பால் துயருற்றிருக்கும் சகோதர, சகோதரிகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

உடுவில். செபஸ்தியாம்பிள்ளை குடும்பத்தினர்

## ஓராண்டு நினைவஞ்சலி

### இராசா முருகேசு



தோற்றம்
04.12.1944

மறைவு
26.06.2018

ஆண்டு ஒன்றானதோ எம் தந்தை எம்மைப் பிரிந்து
அன்புடனும் பண்புடனும் எம்மை
வழிநடத்திய ஆருயிர் தெய்வமே!
எப்போது காண்போம் உம் இனிய முகம்
ஆறாத் துயரினால் தவிக்கின்றோம்
மீண்டெழுந்து வரமாட்டீர்களா அப்பா!

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
13 . 07 . 1947



ஆண்டவன் அடியில்
26 . 07 . 2018

### அமரர் வட்டன் துரைச்சாமி

(கைதடி கிழக்கு, பண்டகவயல்)

திதி: 15.07.2019

ஆண்டொன்று ஆனாலும் ஆறாத துன்பம் எமக்கு
பண்பில் சிகரமாய் பார்வையில் இறைவனாய்
கஷ்டங்கள் பல கண்டு
கண்ணியமாய் வாழ்ந்தீரே
என்றும் அழியாது - உங்கள் நினைவுகள்

கைதடி கிழக்கு.

மனைவி
து.இலட்சுமி

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
### கந்தசாமி பரமேஸ்வரி

திதி: திரயோதசி

தோற்றம்
20.04.1938

மறைவு
15.06.2019



நாள்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகங்கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தமும் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அராலி தெற்கு,
அராலி.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

நல்லூர் மண்ணில்
15 . 11 . 1948



அரசடிப் பிள்ளையார் அடியில்
15 . 06 . 2019

திருமதி
## சறோஜினிதேவி கோபாலபிள்ளை

திதி: வைகாசித் திங்கள், பூர்வபக்க சதுர்த்தசி

வஞ்சனை இல்லா உள்ளம்
யாவருக்கும் உதவிடும் குணம்
வேசம் இல்லாமல் பாசம் தந்த தாயே !
கடமை முடிந்தது என நினைத்தீர்களோ. இல்லை
பிள்ளையாருக்காக தொண்டு செய்ததனால்
அவன் தன்னோடு அழைத்தானோ ..!
உங்களைக் காக்க உழைத்தோம்..... அம்மா முடியவில்லையே தாயே !

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய நயினை அம்பாள்.
(அரசடி. பண்டாரகுள) பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

இல.2/1, மூத்த விநாயகர் வீதி,
கடுக்காயடி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்
மற்றும் பேரப்பிள்ளைகள்

(CS 239031)(14.17)

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு தங்கி நின்று பணிபுரிய பணிப்பெண் தேவை.

077 904 0413 , 077 638 8383

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யக்கூடிய மேசன், பெயின்ரர் (Mason & Painter) மற்றும் நாள்கூலி மேசன். கூலியாள்கள் தேவை.

தொடர்புக்கு:- 076 316 5734
077 592 5371

## நாகபூஷணி திருமண சேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

257, பலாலி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

## வீட்டுப்பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம்ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர்தேவை. - 077 262 6944

## மரண அறிவித்தல்

### திருமதி யோசெப்பின் வேதநாயகம் (குலம் அக்கா)



பிறப்பு 19.03.1935
இறப்பு 11.07.2019

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி வே.யோசெப்பின் (குலம் அக்கா) கடந்த 11.07.2019 காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (16.07.2019) செவ்வாய்க்கிழமை நடைபெறும். காலை 8.30 மணிக்கு 36ஏ, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெறும் அதனையடுத்து காலை 10 மணிக்கு புனித மரியாள் (கொஞ்சேஞ்சி மாதா) தேவாலயத்தில் இறை ஆசீர்வாத நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கமும் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


36 ஏ, கடற்கரை வீதி,
குருநகர்,
யாழ்பாணம்.

தகவல்: அ. வரத்ராஜப்பெருமாள் - 0094768679292
றோய் டன்ரன் - 0094779970815
போல் பிரகலாதன் -00447944474839

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 02 . 1924



இறப்பு
04 . 07 . 2019

### சின்னத்தம்பி இராசையா

(இளைப்பாறிய இலங்கை புகையிரத நிலைய அதிபர்)

யாழ்ப்பாணம் வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகவும். திருநெல்வேலி. லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசையா (இளைப்பாறிய இலங்கை புகையிரத நிலைய அதிபர்) கடந்த 04.07.2019 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும். பொன்னம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும். இராசலட்சுமியின் அன்புக் கணவரும். காலஞ்சென்றவர்களான அன்னபாக்கியம். தருமலிங்கம். நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை. தனலட்சுமி. அன்னலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும். ரஞ்சனா. மனோகரன். சுலோஜனா. பிரபாகரன் ஆகியோரின் அருமைத் தந்தையும். கானமூர்த்தி. கல்பனா. யோகராஜா. கௌசல்யா ஆகியோரின் அருமை மாமனாரும். யோகரஜனி. நிருத்பவான். காலஞ்சென்ற நீரஜா மற்றும் கீரவாணி. சுலக்ஷன். சத்தியார்த்தி. சத்தியபிரசாந்த். பிரகல்யா. பிரியங்கா. பிரவீனா ஆகியோரின் அன்புப் பேரனும். டிதுஷன். ஷிவானி. ரிஷி. லக்சாயினி. ஆரியா. ஹரிகரபவான். பவகரினி. ரியானா ஆகியோரின் அன்புப் பூட்டனும். குகதேசன். சிவநேசன். அகிலேஸ்வரி. ரகுராம். ஜெயராம் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2019) செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

தகவல்: ந. ஜெயராம் (ராம்- பெறாமகன்). 077 703 7963

பிரபாகரன் (மகன் - லண்டன்) - 0044 7915 665420,
ரஞ்சனா (மகள்) - 0044 7910 847024

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 08 . 1925



மறைவு
13 . 07 . 2019

### திருமதி அன்னம்மா தியாகராஜா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் திருமலை. பண்ணாகம். ஆனைக்கோட்டை தற்போது மானிப்பாயில் வசித்தவருமாகிய திருமதி அன்னம்மா தியாகராஜா 13.07.2019 அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தியாகராஜாவின் அன்பு மனைவியும். சுலோஜனாதேவி (கனடா). பாலகுமார் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கொழும்பு 14 - கலைமகள் வித்தியாலயம்). சந்திரகுமார் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் - யா/இந்துக்கல்லூரி). பிறேமகுமாரி (கனடா). காலஞ்சென்ற கணேசலிங்கம் (கணித ஆசிரியர் - யா/ பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்). இராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும். காலஞ்சென்ற சந்திரசிங்கம் (நில அளவையாளர்). தெய்வநாயகி. நவலட்சுமி (அதிபர் -யா / ஆனைக்கோட்டை R.C.T.M.S). சிவபாதரத்தினம் (கனடா). வேல்நிதி (பண்ணாகம்). ஜெயவாணி (கனடா) ஆகியோரின் அருமை மாமியும். காலஞ்சென்றவர்களான கனகம்மா. பொன்னம்மா. சிவப்பிரகாசம். மாரிமுத்து மற்றும் சரஸ்வதி. செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். வசந்தகுமாரி. நந்தினி - ஹொங்க். சுபாசினி - சுதாகர். சுதர்மன் - கிஷ்ணவேனி. புவிதரன். சிவறஜன். சுஜன் - நீதினி. சுஜானி - நிரூஷன். கஜன். நிஷாந்தி - வைகுந்தன். சிந்துஜா - சுரேஷ். கஜேந்திரன். கஜானி. வினிதா. சோபினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். மாயா. பிரமோதன். தாமரை. ஆதவன். உமையாள். சேந்தன் சேயோன். ஆதித்யன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2019) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலடி வீதி. மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு எருக்கலம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கஜபதி"
நாவலடி லேன். மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்



# யாழ்ப்பாணம் வண்
# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி
# தேர்த்திருவிழா சிறப்



வீரமாகாளி அம்மன் ஆலயம்

யாழ்ப்பாணஇராசதானிகாலம் தொடக்கம் மிகவும் முக்கியத்துவம் பெற்ற கோயிலாக வீரமாகாளி அம்மன் கோயில் விளங்குகிறது. இவ்வாலயம் சிங்கையாரியச் சக்கரவர்த்திகளால் 1470 ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறுகள் குறிப்பிடப்படுகின்றன. வீரமாகாளி தெய்வம் போருக்கான தெய்வம். அதனால் சங்கிலியமன்னன் போருக்கு செல்வதற்கு முன்னர் இவ்வாலயத்திற்கு வந்து வழிபட்டுச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தான் எனக் கூறப்படுகிறது. மேலும் யாழ்ப்பாணத்தை ஆண்ட அனைத்து தமிழ் மன்னர்களின் குலதெய்வமாக வீரமாகாளி விளங்கினாள். போரில் வெற்றி வேண்டி யாழ்ப்பாணத்துத் தமிழ் மன்னர்கள், போர்த் தெய்வமான வீரமாகாளி அம்மனை தங்கள் குலதெய்வமாக பக்தியுடன் வழிபட்டார்கள். ஆரியச் சக்கரவர்த்திகள் அம்பிகையைத் தியானித்து வழிபட்டு வீரம் பெற்றார்கள் என வரலாறு குறிப்பிடுகின்றது. அக்காலத்தில் கோயிலில் இடம் பெற்ற திருவிழாக்கள் மற்றும் பெருவிழாக்களில் நவராத்திரிக்கு மிக முக்கியமான இடம் இருந்துள்ளது. தமிழ் மன்னர்களின் போர் வெற்றியைப் பறைசாற்றும் பெருவிழாவாக நவராத்திரி கொண்டாடப்பட்டுள்ளது. இலங்கையில் முதன்முதலாக நவராத்திரி கொண்டாடப்பட்டு மகுடாசுரவதம் நடைபெற்ற ஆலயமாக வீரமாகாளி அம்மன் கோயில் விளங்குகின்றது.

தமிழ் மன்னர்களின் வீரத்
விதமாக சங்கிலிய மன்ன
மானம்பூ உற்சவத்தில் வா
செய்த நாளே விஜயதசமி
நாள்கள் போர் நடைபெற்ற
மகுடாசுரன் வன்னி மரத்தி
அசுரனை வதம் செய்து
வன்னிமரக் கிளைகளைப்
கோயில் கர்ப்பக்கிரகத்தில்
அமையப் பெற்றுள்ளது.
ஒருவகை சுகாசனத்தில்
பறங்கியர் கோயிலை அழி
வழிமறித்து கர்ச்சித்து ப
திருவிழாக்கள் வான வே
இந்தியக் கோயில்களுக்கு
தொட்டித் திருவிழா, சப்பற
தினங்களாகும். இவ்
தொடர்புகொண்டு வீரத்தின்
இன்றும் இலங்கையில் சிற



ஆதிபராசக்
அருள்பாலி
ஆலயம். இ
தேரிலே அலங்கார பூஜ
பேரழகு சொல்லில் அடங்கா
அகிலாண்ட கோடி பிரம்மா
நேரிலே காட்சிதரும் பாங்க
முத்தால் சொர்க்கத்திலே இ
இந்த மஹோற்சவத்தில் ர
களையும் அக்கிரமங்கள
அள்ளி வழங்கும் அம்பி
வழங்கி வாழ்த்துகின்றே
மென்று உளமாரப் பிரார்த்தி

ஸ்ரீலஸ்ரீ சோ


## அம்பாள் மரக்காலை



இல.261,
பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்பாள் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## Yarl Pardy
Your Home in Jaffna

49-51, அம்மன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 6868, 0777 340026, 0759 875 800, 0777 360 353
tysunda@gmail.com

Institu
75

## அம்பாள் வெதுப்பகம்



AMBAL
Bake House
இல.252,254,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## கிருபா லேணர்ஸ்
(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)
மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்.
தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353/ 021 492 3200/ 077 722 5292 / 071 454 6960

A9 வீதி, கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 454 695

216, A9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777, 077 710 0444




## நந்தலாலா இரும்பகம்
## Nanthalala Hardware



Dealers in All kind of Power Tools, Machine,
Electronic Scale & Silver Pipe & Fittings
No.29, Stanley Road, Jaffna. Tel: 021-2226234

## சிறி சோமாஸ்
## அரைக்கும் ஆலை



300, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழுப்பாணம்.



# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய
# தேர்த்திருவிழா
# சிறப்பிதழ்
## 15.07.2019

வட இலங்கையிலே வரலாற்று மகிமையும், வழிபாட்டுச் சிறப்பும் கொண்ட நாற்புறமும் கடலால் சூழப்பட்ட மணிமேகலைக் காவியத்திலே இடம் பெற்று சப்த தீவுகளிலே மணிபல்லவம் எனப்படும் தனிப்பெருஞ் சிறப்பு மிக்கது நயினாதீவு. அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதியும் நயினையம்பதியாகும். நயினாதீவின் தனித்துவம் மிக்க சிறப்புகளுள் மேலானதும், மகத்துவமானதும் இத்தீவிலே எழுந்தருளிப் பேரருள் பாலித்துக் கொண்டிருக்கும் உலக மாதாவாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆலயமாகும். சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் ஒன்றான புவனேஸ்வரிபீடம் என்றழைக்கப்படுவதும் அன்னையவளின் ஆலயமாகும். ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஆலய மூல விக்கிரகத்தின் தோற்றம், வரலாறு என்பன இன்னமும் கண்டறிய முடியாத பேரதிசயமாகவே உள்ளது. முழுநம்பிக்கையோடு வழிபடும் அடியார்களது கவலைகளையும், நோய்ப் பிணிகளையும் நீக்கியருளும் பேரருள்சக்தியாகவே ஸ்ரீநாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள்.

அன்னைய்யவளின் ஆலயம் கிழக்கு நோக்கிய 108 அடி உயரமான கோபுரம். அலைகடலில் நீந்தி அருட்கடலை நாடிவரும் அடியவர்களைத் தாங்குகின்ற இயற்கைத் தத்துவத்தை வலியுறுத்துகின்றது. அடியார்கள் அரோகரா என்று வந்து கால் பதிக்கின்ற இறங்குதுறை நயினையம்பதிக்கே இயற்கையால் கொடுக்கப்பட்ட நற்றவத் தோற்றமாகும்.

அன்னை பராசக்தி தன்னை நாடிவருகின்ற பெருந்திரளான அடியார்களின் துன்பதுயரங்களை யெல்லாம் தனது அருட்கடாட்சத்தால் நீக்கி நல்லருள் வழங்கி வருகின்றாள். அன்னையின் மணியோசை அகிலமெல்லாம் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. காலாதி காலமாக முழுநம்பிக்கையோடு அம்பாளை வழிபட்டு நல்லருளைப் பெற்றவர்கள் பலர். நற்பேறு அடைந்த அடியார்கள் அனேகர். தன்னை வந்து தரிசிக்கும்படி அடியார்களுக்கு கனவிலும், நனவி லும் நாகபாம்பாகத் தோன்றி அவர்களைத் தன்வசம் ஈர்க்கின்ற அம்பாளின் அற்புதங்கள் பலப்பல. அம்பாள் உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் தாயானவள். அழகுக்கொருவரும் ஒவ்வாத ஆனந்த வல்லியாக அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக அன்னை பராசக்தி விளங்குகின்றாள்.

**முழு நம்பிக்கையோடு வழிபடும் அடியார்களது கவலைகளையும், நோய்பிணிகளையும் நீக்கியருளும் பேரருட்சக்தியாகவே ஸ்ரீநாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள்.**

தொடர்ச்சி ப-III




Yarl Smart Water Solution (Pvt) Ltd
உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று நீர் பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமா?
LIFE TIME Service Warranty
30 Liters Per Hour
60 Liters Per Hour
SPECIAL OFFER
250 LPH Water Purification Plant.
யாழ் மக்களின் நீர்ப்பிரச்சினைகளுக்கு
ஏற்ற முறையில் 5000/- இல் இருந்து நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.
நீரில் உள்ள பிரச்சினைகளின் தீர்வாக நாங்கள்....
Hotline:- 077 057 3684 077 473 9802 077 112 6410
Head Office:- No.341,K.K.S Road, Jaffna. 021 430 0044
Branch:-Karadippokku Junction, Kilinochchi. 021 430 0045


சரஸ்வதி மண்டபம்
Saraswathy Hall
Mob: 077 923 4176
www.saraswathyhall.com
saraswathyhall_rajah@live.com
★ யாழ் மாநகரில் மிகப் பிரமாண்டமான மண்டபம்.
★ நியாயமான கட்டணங்களுடன் கூடிய தரமான சேவை.
★ எல்லா மதத்தினருக்கும் அவரவர் கலாசாரத்துக்கும் விரும்பிய நிறத்துக்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரங்கள்.
★ முற்றிலும் குளிரூட்டப்பட்ட (AC) வசதி.
★ மண்டபத்துடன் இணைந்த ஐஸ்கிறீம் விற்பனை நிலையம்
A1 Rajah Cream House
#37, Sir Pon.Ramanathan Road, Jaffna. (Near Nachimarkovil Temple) Tel: 021 221 6085
கம்சியா மஹால்




## தொடர்ச்சி...

துன்ப, துயரங்களை அகற்றி நல்லருள் தர வருகின்றாள். தேர்த்திருவிழா அற்புதமாகவும், பக்தி பூர்வமாகவும், பெருவிழாவாக நயினையில் கோலாகல மாக நடைபெறுகின்றது.

வெள்ளமெனப் பக்தர்கள் எல்லாம் அம்பிகையின் திருத்தலத்தில் உள்ளம் உருகி வழிபடுகின்ற அருட் காட்சியைத் தேர்த்திருவிழாவன்று காணலாம்.

மெய்தான் அரும்பி, விதிர்விதித்து, கைதான் தலைமேல் வைத்து, கண்ணீர்ததும்பி, வெதும்பி அம்பிகையை அடியார்கள் வழிபடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அடியார்களின் அரோகரா ஒலி வானைப் பிளக்கும். ஆலய வீதிகள் எங்கனும் சன சமுத்திரமாகவே காணப்படும். ஆனி மாதத்தில் அகிலமெல்லாம் அம்பிகையின் பேரொளி வீசத்தொடங்கிவிடும். அழகிய சிற்ப வேலைகளுடன் கூடிய திருத்தேரில் அம்பாள் ஆரோகணித்து எழுந்தருளி விநாயகப் பெருமான், முருகப் பெருமான் திருத்தேர்களுடன் வீதியுலா வருவதைக் காணில் கவலைகள் எல்லாம் பறந்தோடிவிடும். இந்தக் காட்சிகளைச் சொல்லோவியமாக வர்ணிக்க முடியாது. அம்பிகையை நேரில் வந்து தரிசித்தால்தான் அம்பிகையின் மகத்துவம் விளங்கும்.

அம்பிகையின் திருத்தேர் மிகவும் சிறப்பான முறையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. அம்பிகையின் சரித்திர வரலாறுகள் பல இந்தத் திருத்தேரில் செதுக்கப் பட்டுள்ளன. குறிப்பாக போத்துக்கீசர் கோயிலை இடித்தால், அப்பொழுது நயினை மக்கள் அம்பாளை மேற்குக் கடற்கரையிலுள்ள ஓர் ஆலமரப் பொந்தில் ஒளித்து வைத்தல், அம்பாளின் தேர் கடலுக்குள் உருண்டு சென்றது. நயினாப்பட்டர் என்ற அந்தணர் அம்பிகைக்குப் பூசை செய்தது போன்ற பல சான்றுகள் தேரில் பொறிக்கப் பட்டுள்ளன. இச்சான்றுகள் அம்பிகையின் மகத்துவத்தை அடியார்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக் கின்றன. அன்னையவளின் அருளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆராத பக்தியினால் பக்தர்கள் கவரப்பட்டு, நயினையம்பதியில் சப்பரத் திருவிழாவன்றே பெருமளவு கூடுவார்கள். அன்று இரவு முழுவதும் அம்பிகை யின சப்பரத்திருவிழாவைக் கண்டுகளித்து நல்லருளைப் பெற்று, தேர்த் திருவிழாவன்று அன்னை பராசக்தியைத் தேரில் கண்டு அருள்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்வார்கள். தேர்த்திருவிழாவன்று அதிகாலையிலும் அடியார்கள் பெருமளவில் கூடுவார்கள்.

விழாக்கோலம் பூண்டிருக்கும் நயினையம்பதி இந்திரலோகம் போலக் காட்சியளிக்கும். தேர்த்திருவிழா வன்று விடியற்காலையிலே அடியார்கள் அம்பிகையின் ஆலயத்தில் கூடிவிடுவார்கள். அடியார்கள் பலர் நேர்த்திக் கடனை நிறைவேற்றும் பொருட்டு அங்கப்பிரதட்சணம் செய்து கொண்டும், அடியளித்துக்கொண்டும் வீதிவலம் வருவார்கள். கோயில் வீதிகள் எங்கனும் பக்திமயமாகவே காணப்படும். அதிகாலையில் பூசைகள், அபிஷேகம், வசந்த மண்டப பூசை முதலியன நேரக்கிரமம் தவறாது நிறைவேற்றப்பட்ட பின்னர் அன்னை பராசக்தி தேரேறி வீதியுலா வருவதற்குப் புறப்படுவாள். பஜனைக்

தொடர்ச்சி ப-V




இலகு கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை
COMPACT SOLUTION FOR SEWAGE & WASTEWATER TREATMENT
மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டது
MADE IN JAPAN
10% விலைக்கழிவு
TWENTY FIVE YEARS WARRANTY 25 Years WARRANTY
• மலசலக்கழிவு
• குளியலறைக்கழிவு
• சமையலறைக்கழிவு
• சலவை இயந்திர நீர்க்கழிவு
போன்ற அனைத்து கழிவு நீரையும்
சுத்திகரித்து உபயோகிக்க சிறந்த முறை
Everpure Hi-Tec (Pvt) Ltd.
No.581, K.K.S Road, Jaffna. (மனோகரா சந்திக்கு அருகாமையில்)
HOTLINE: 075 331 3310
Tel: 021 222 6888


ஆதி நாயகி நயினை அன்னையின் திருவிழா சிறக்க பிரார்த்திக்கின்றோம்.
Vayuputhra
Phone Shop
வாயுபுத்ரா போன் சொப்
No.364, Hospital Road, Jaffna.
T.P: 077 364 4246
077 859 5151
V 15, V15 Pro
F11, F11 Pro
vivo
அனைத்து விதமான போன் விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்
வாயுபுத்ரா புக்கிங் சென்றர்
அதிசொகுசு பயணிகள் போக்குவரத்து சேவை
077 36 44 246 / 077 85 95 151
சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
ஆசனப் பதிவகம்
யாழ் ⇄ கொழும்பு
(தினமும்)
ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் ➤ இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## தொடர்ச்சி...



கோஷ்டிகள் ஒருபுறம், கர்ப்பூரச்சட்டி ஏந்தும் பெண்கள் ஒருபுறம். இப்படியாக அடியார்கள் பக்திக்கோலத்துடன் தேர் வீதி உலாவரும்போது தேரின் பின்னால் வருவதே அற்புதக் காட்சி எனலாம்.

அம்பிகையின் தேர் வடம்பிடித்தால் மிகப்பெரும் புண்ணியமாகும். வடம் பிடித்தவர்கள் அம்பிகை யின் திருவடியில் இடம்பிடித்தவர்கள். இதனால் அடியவர் கள் தேரின் வடம் பிடிப்பதற்காக முந்திக் கொள்வதை நான்கு வீதிகளிலும் காணலாம். மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டி நிற்கும் அன்னை பரா சக்தியை தேரில் கண்டு தொழ அடியார்கள் முந்திக் கொள்வதை வீதிகள் எங்கணும் காணலாம். தேர்த்திருவிழா வாருங்கள். வருகை தந்து அம்பிகையின் அழகுத் திருக் கோலத்தைக் கண்டு அருளமுதைப் பெற்றுக் கொள்ளுங்கள். அம்பிகை யைத் தரிசிக்கவரும் பல்லாயிரக்கணக்கான அடியார் களுக்கு அமுத சுரபி அன்னதான சபையினர் அன்ன தானம் வழங்குகின் றார்கள். அம்பிகையின் அருள்சுரக்க, அமுதும் சுரந்து வருடந்தோறும் இதன் சேவை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.









உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கல்முனை வடக்கு அப்பப் பங்கீடா?

குரங்கு அப்பம் பங்கிட்ட கதை ஒன்றை சிறுவயதில் எல்லோருமே படித்திருப்போம். ஒரு வீட்டில் வளர்ந்த இரு பூனைகள் தமக்குக் கிடைத்த ஒரு அப்பத்தைச் ச ரியாகப் பங்கிட்டுக்கொள்ள முடியாமல் சண்டையிட்ட பின்னர் அதனைப் பங்கிட அந்த வழியால் வந்த குரங்கின் உதவியை நாடின. தராசு ஒன்றை எடுத்து வந்த குரங்கு அப்பத்தை இருதுண்டுகளாக்கி அதிலிட்டது. இரண்டு சமதுண்டுகளாக இல்லாததை அடுத்து அதனைச் சமப்படுத்துவதற்கென ஒவ்வொரு தடவையும் நிறைகூடுதலாக இருந்த அப்பத்துண்டைக் கடித்துக் கடித்துத் தின்று இறுதியில் முழு அப்பத்தையுமே தின்று தீர்த்துவிட்டது. தமக்குக் கிடைத்த பொருளை தமக்கிடையில் பங்கிட்டுகொள்ளத் தெரியாமல் போனதன் விளைவு இது என்பது இந்தக் கதைகயின் நீதி.

கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவது குறித்த விடயத்தில் தமிழர்கள் தரப்பும் முஸ்லிம்கள் தரப்பும் மாறி மாறிக் கூறிவருவதைப் பார்க்கும்போதும் இந்தக் கதைதான் ஞாபகத்திற்கு வருகின்றது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வருவதற்கு முன்பாக தமிழர் மற்றும் முஸ்லிம் தரப்புகள் இரண்டுடனும் கல்முனை விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டது. தலைமை அமைச்சரே இந்தப் பேச்சுக்களை நடத்தினார்.

அதன் பின்னர் கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தை முழு அளவிலான பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கையாக அங்கு ஒரு நிரந்தரக் கணக்காளரை நிய மிப்பதற்கான உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுமதி, திறைசேரியின் அனுமதி ஆகியவற்றுடன் கணக்காளர் நியமனத்துக்கான ஆளணி அங்கீகாரம் என்பன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கப்பட்டது.

கல்முனை உப பிரதேச செயலகத்துக்கான நிதி அதிகாரத்தை தலைமை அமைச்சர் வழங்கினார் என்று இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஏப்ரகாம் சுமந்திரன். “கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்கான ஆளணி வெற்றிடமும் உருவாக்கப்பட்டுள்ளது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இன்று திங்கட்கிழமை கல்முனை தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவிற்குக் கணக்காளர் ஒருவர் நியமிக்கப்படுகிறார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இவ்வாறு வெளிவரும் செய்திகள் எல்லாமே பொய் என்றும் அப்படிப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் ஊடகங்கள் செய்தி வெளியிடுவது போன்று கல்முன்ன வடக்கு உப பிரதேச செயலகத்துக்கான நிரந்தமான கணக்காளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்றும் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் தெரிவிக்கிறார்.


தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் முஸ்லிம் சிவில் சமூகத் தரப்பு ஒன்று முதலில் பேச்சு நடத்தியதாகவும் அதில் பேசப்பட்ட விடயங்கள் குறித்துப் பின்னர் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் விளக்கமளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படுவதற்கான தமது முழு எதிர்ப்பையும் பதிவு செய்தனர் என்றும் அங்கு நிரந்தரக் கணக்காளர் ஒருவர் நியமனம் செய்யப்படக்கூடாது என்று திட்டவட்டமாகத் தாம் எதிர்த்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட தலைமை அமைச்சர், கணக்காளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என்று தம்மிடம் உறுதிமொழியளித்தார் என்றும் அவருடன் நடத்தப்பட்ட பேச்சு முஸ்லிம் தரப்பினருக்குத் திருப்திகரமாக அமைந்திருந்தது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் தெரிவித்திருக்கிறார். இந்தச் சந்திப்பின் போது அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடமும் தாம் அதனைத் தெரிவித்தார்கள் என்றும் கல்முனை விவாகரம் தொடர்பில் முஸ்லிம் தரப்புடன் கலந்துரையாட அவர் வாய்ப்புக் கேட்டார் என்றும் கூட ஹரிஸ் கூறுகிறார். தமிழர், முஸ்லிம்கள் இருவருமே நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன்னதாகத்தான் ரணிலைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். வாக்குறுதிகளையும் உத்தரவாதங்களையும் பெற்றிருக்கிறார்கள். இரு தரப்புகளுக்கும் திருப்தியளிக்கும் வகையில் அப்படி என்ன தீர்வைத் தலைமை அமைச்சர் முன்வைத்தார் என்பது இன்னும் தெளிவாகவில்லை. இன்னும் சில நாள்களில் அது வெளிச்சத்துக்கு வந்துவிடும். இந்த விடயத்தில் யார் ஏமாற்றப்பட்டார்கள் என்பது தெரிந்துவிடும்.

ஆக, மொத்தத்தில் பூனைகள் தமக்கிடையில் அப்பத்தைப் பங்கிட்டுக்கொள்ள முடியாமல் போனதால் குரங்கின் கைகளில் இப்போது அப்பம் பங்கிடப்பட்டுக்கொண்டிருக்கிறது.

## சம்பந்தனின் தலைமையில்

# தமிழர்கள் ஒன்றிணைவதே விமோசனத்தை அளிக்கும்



இந்துமதி

அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரேரணைக்கு ஆதரவாக 92 வாக்குகளும் எதிராக 119 வாக்குகளும் அளிக்கப்பட்டன. கூட்டமைப்பின் 14 வாக்குகளும் பிரேரணைக்கு ஆதரவாக அளிக்கப்பட்டிருக்குமானால் அது ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேறி இருக்கும் என்பதுடன் அரசு பதவி விலக வேண்டிய கட்டாய நிலையொன்றும் தோன்றியிருக்கும். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு இதைக் கவனத்தில் கொண்டிருக்குமென நம்பலாம்.

இந்த நாட்டில் பரம்பரை பரம்பரையாக நீண்ட காலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்கள் தொடர் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து இது தொடர்கின்றது. இதற்குத் தீர்வு காண்பதற்கு சிங்கள அரசுகள் தவறிவிட்டனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் மாறி மாறி ஆட்சி பீடத்தில் அமர்ந்த போதிலும் தமிழர்களுக்கு தீர்வு எதையும் இதுவரையும் வழங்கவில்லை.

ஆனால் இந்தக் கட்சிகளின் ஆட்சியில் தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரங்கள் இடம்பெற்றிருக்கின்றன. சுமார் 30 ஆண்டுகளாக நீடித்த இறுதிப் போரின் போது தமிழர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர்.

சிங்கள ஆட்சியாளர்கள் போரைத் தொடர்ந்து நடத்துவதிலேயே ஆர்வம் காட்டி வந்தனர். அமைதியையும் சமாதானத்தையும் விரும்பாதவர்கள் போன்று அவர்கள் நடந்து கொண்டனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தின் போது இடம்பெற்ற இறுதிப் போர் தமிழர்களின் அத்திபாரத்தையே ஆட்டிப்பாத்து விட்டது.

மகிந்த ராஜபக்ச அப்போது ஆட்சித் தலைவராய் பதிவி வகித்தார். அதனால் தமிழர்களின் ஆதரவை எவ்வாறு எதிர்பார்க்க முடியும். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின் போது கூட்டமைப்பு அதற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அரசு கவிழ்ந்து விடுமானால் தாம் ஆட்சியில் அமர்ந்து விடலாமென்ற நட்பாசையும் அரசிடம் மேலோங்கிக் காணப்பட்டது. அவரது விருப்பம் நிறைவேறி இருந்தால் தமிழர்களின் நிலை மோசமானதாகவே அமைந்திருக்கும்.

இந்த நிலையில் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் தமது பழுத்த அரசியல் அனுபவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த அரசைக் கவிழ்த்து விட்டு நாம் எதைத் தான் செய்ய முடியும் என நிலையானதொரு கேள்வியையும் எழுப்பியுள்ளார். இதே வேளை கூட்டமைப்பின் நெருக்குதல் காரணமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துகின்ற பணிகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டன. அங்கு கணக்காளர் ஒருவரை நியமிப்பதற்கும் தனியான வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையும் உடனடியாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தலைமையிலான முஸ்லிம் குழுவிடம் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேலும் திருகோணமலை கன்னியாவில் பிள்ளையார் ஆலயத்தை உடைக்கும் முறச்சிகளும் நிறுத்தப்பட்டதோடு ஓமந்தையில் தனிச் சிங்கள பிரதேச செயலகத்தை அமைக்கும் முயற்சிகளும் நிறுத்தப்பட்டன. இவை மட்டுமல்லாது தமிழர்களுக்குப் பாதகமான விடயங்களை உடனடியாக நிறுத்து வதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கூட்டமைப்பைக் குறை கூறுபவர்கள் இனியாவது தம்மைத் திருத்திக் கெள்ள வேண்டும். சம்பந்தனின் வீட்டுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்துவதன் மூலமோ ஊடகங்கள் ஊடாகப் பொய்யான தகவல்களைப் வழங்குவதன் மூலமோ தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைத்து விடாது.

இவை யாவும் சுயநல அரசியல் நடவடிக்கையாகவே பார்க்கப்படும். தமிழ் மக்களுக்கென ஏற்கனவே கூட்டமைப்பு என்ற பெயரில் ஒரு கூட்டணி இருக்கும் போது மேலும் ஒரு கூட்டணி அமைக்கப்பட வேண்டும் என் சி.வி. விக்கினேஸ்வரன் கூறியிருக்கின்றமை அவரது அரை வேக்காட்டுத்தனமான அரசியல் அனுபவத்தையே வெளிக்காட்டுகின்றது.

கஜேந்திரகுமாருடன் கூட்டணி அமைப்பதில் தோல்வி கண்ட அவர் தற்போது புதுக்கதை ஒன்றை கூறியிருக்கிறார். இவரை நம்பி இவருக்குப் பின்னால் எவருமே செல்லமாட்டார்கள் என்ற உண்மையை இவர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே வேளை ஒத்துவராத முன்னணியை ஓதுக்கி வைத்து விட்டு ஏனைய கட்சிகள் புதிய முன்னணி ஒன்றை அமைக்கவேண்டும் என விக்கினேஸ்வரனுக்கு மிகவும் நெருக்கமான சுரேஸ் பிரேமச் சந்திரன் கூறியிருக்கிறார். முன்னணியையும் கூட்டமைப்பையும் புற மொதுக்கி விட்டு வேறு எவருடன் அவர் முன்னணி அமைக்கப் போகிறார் என்பது தெரியவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் பேதங்கள் அனைத்தையும் மறந்து விட்டு தமிழர்கள் சம்பந்தனின் தலைமையின் கீழ் ஒன்றினைவதே விமோசனத்தை அளிக்கும்.

# பிழையான தீர்வைத் தவிர்த்தால் எமக்கு சரியான வழி பிறக்கும்

## பேராசிரியர் சிறிசற்குணராசா சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 15

இனப்பிரச்சினை தொடர்பில் நாங்கள் பிழையான தீர்வுகளைத் தவிர்த்தால் சரியான வழி பிறக்கும். முதலில் பிரச்சினையை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணிதத்துறைப்பேராசிரியர் சிறிசற்குணராசா அதை விளங்கிக் கொள்வதற்குதான் அமிர்தலிங்கம் பாடுபட்டார் என்றும் தெரிவித்தார்.

வலி.மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று இடம் பெற்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு நினைவுப் பேருரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

உண்மையில் எமது இனப்பிரச்சினைக்கு முக்கிய காரணி கொழும்பில் இருந்து அரசியல் செய்தவர்கள் எங்களுடைய பிரச்சினையை சுதந்திரத்துக்கு முன்னர் சரியாகக் கவனிக்கவில்லை. விளங்கிக் கொள்ள வில்லை.

பிறகு தான் யோசித்தார்கள் , பண்டாரநாயக்க போன்றோர் சன்னதமாடத்தான் தவறு என்று விளங்கினார்கள். ஆகவே நாங்கள் கொழும்பில் இருந்துகொண்டு இங்கு அரசியல் செய்யமுடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் வட்டுக்கோட்டையில் மக்களுடன் மக்களாக இருந்து வட்டுக்கோட்டையைப் பார்த்துக்கொள்வது போன்று நாங்கள் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும். நாங்கள் எங்களுடைய வீடுகளில் முதல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். பிறகு எமது கிராமத்தில், பிறகு நகரத்தில், பிறகு மாவட்டத்தில், பிறகு எமது மாகாணத்தில், பிறகு கிழக்கு மாகாணத்தில் இப்படித்தான் எமது செயற்பாடுகளை விரிவடையச் செய்யவேண்டும்.

தீர்வு காணமுடியாத ஒன்றுக்கு கணிதத்தில் கூறுவார்கள் மில்லியன் டொலர் என்று.

யாராவது தீர்த்தால் அவர்களுக்கு மில்லியன் டொலர். இனப் பிரச்சினையும் அப்படித்தான். சரியான தீர்வு ஒன்று தெரியாமல் இருக்கலாம். ஆனால் ஒரு பிழையான தீர்வு தெரியும். நாங்கள் பிழையான தீர்வுகளைத் தவிர்த்துக்கொண்டு சென்றாலே எமக்கு சரியான வழி பிறக்கும் அந்தச் சரியான வழியைக் காட்டவேண்டியது எங்களைப் படைத்த, எங்களுடைய சமூகத்தின் வேண்டுதலை நிறைவேற்றும் இறைவனுடைய வேலை. அமிர்தலிங்கத்துக்கும், செல்வநாயகத்துக்கும் கொழும்பில் வீடுகள் கிடையாது.

அமிர்தலிங்கம் அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று மக்களுடைய பிரச்சினைகளைக்



கேட்பார். அதனால்தான் அவர் தளபதி. திக்கு திக்காக இருக்கிற மக்களை ஒன்றிணைக்கும் கொள்கைகள்எமக்கு வேண்டும். தந்தை செல்வா போகும்போது கூறினார் இனி அமீர் இதைப் பார்ப்பார். நான் நினைக்கிறேன் அவருடைய காலத்தில் மக்களுக்கு ஒரு தீர்வு வரும் என்று எனக் கூறியிருக்கிறார். அமீரைத் திடீரென்று கொண்டுபோய்விட்டார்கள். பின்னர் சம்பந்தன் ஐயாவின் தலைமையில் சென்றுகொண்டிருக்கிறோம். பொன்னாலையில் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆயுதச் சத்தம் முள்ளிவாய்க்கால், நந்திக்கடலில் போய் முடிந்துவிட்டது. கடந்த 10 ஆண்டுகள் அதுபற்றிய யோசனைகளுடன் கடந்துவிட்டன.

இப்போது புதிய தலைமை, மாவை சேனாதிராசாவுக்கு ஒரு சவால் உள்ளது. நாங்கள் எப்போதும் வருவதைப் பெற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கவேண்டும். எங்களுடைய வாழ்க்கையில் எமக்கு நிறைய நிறையச் சந்தர்ப்பங்கள் வரும். எங்களுடைய போராட்ட வரலாற்றில் நாங்கள் தவறவிட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. இனி சந்தர்ப்பங்களை நாங்கள் தவறவிட முடியாது. இன்று நாங்கள் உள்ள நிலையில் எமது அனுபவங்களை காக்கவேண்டும். காக்கவேண்டும் என்றால் வயது முதிர்ந்தவர்களால் அது முடியாது. அடுத்த தலைமுறைக்கு இதைக் கடத்தியாக வேண்டும்.

எங்களுடைய சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு நாங்கள் ஆவலோடிருக்கிறோம், அபிலாசைகளோடு இருக்கிறோம். எங்களுடைய கலாசாரத்தைப் பேணுகின்றோம். எங்களுடைய மொழியைப் பேசுகிறோம் என்ற நிலையில் நாம் இருக்கவேண்டும்.

ஆனால் இன்று காணிகள் விடுவிக்கப்பட்டாலும் குடியமர்வதற்கு ஆள்கள் இல்லை. எல்லோரும் கொழும்பில்தான் உள்ளார்கள். இதுதான் உண்மை. நாங்கள் கற்பனையில் அரசியல் நடத்தமுடியாது. மக்கள் ஆவலாக இருந்தால் அது கிடைக்கும். அது மாவை சேனாதிராசாவுக்குள்ளாகக் கிடைக்கலாம் அல்லது இன்னொருவருக்கூடாகவும் கிடைக்கலாம்.

எங்களுடைய தமிழ் அரசியலைத் தேர்தல் அரசியல் ஆக்கக்கூடாது. நாடாளுமன்ற அங்கத்துவத்தில் இதுக்கு மேல் ஒன்றும் கிடையாது. இனிச் சிங்களவர்களுக்கு புத்தி சொல்லமுடியாது. எல்லோருக்கும் கூறியாகிவிட்டது. இனி புதுப்புது டொங்கிகளும், மங்கிகளும் வருவார்கள். அவர்களுக்கும் எமது பிரச்சினைகளைக் கூறிக்கொண்டிருக்கமுடியாது. நீங்கள் ஒவ்வொருவருக்கும்போய் விளங்கப்படுத்திக் கொண்டிருக்கப் போகிறீர்களா? இதுவா உங்களது வேலை? இதற்கு அப்பால் சமூக நலனில் அக்கறையுள்ள அனைவரையும் இணைத்து நாங்கள் எங்களுடைய பற்றை வளர்க்கவேண்டும். இந்தியாவில்தான் புத்த சமயம் தோன்றியது. புத்த கோவில்கள் பரவின.

ஆனால் சங்கராச்சாரியர் என்றொருவர் பிறந்து 33 வயதில் இறக்கும்போது இந்தியாவில் ஒரு புத்தன் இல்லை. இன்று நீங்கள் புத்த கோவில்களைக் கண்டு பயப்படுகிறீர்கள். ஏன் பயப்படுகிறீர்கள் உங்களுக்குள் சங்கராச்சாரியார் இருக்க வேண்டுமே தவிர, புத்த கோவிலைக் கண்டு பயப்படவேண்டிய தேவையில்லை.

போர்த்துக்கீசர் எம்மை ஆண்டார்கள் இன்று இந்துக்கோவில்கள் இல்லையா? தமிழ் அரசுக்கட்சி இன்னும் பிறழவில்லை. அதுதான் உங்களுடைய திடகாத்திரம். மெதுவாகச் சென்றாலும் பரவாயில்லை. நேராகச் செல்லுங்கள்.

கடந்த 70 ஆண்டுகாலப்போராட்டங்கள் வரலாறுகளாக தொகுக்கப்படவேண்டும். இளைஞர்கள் எமது அடுத்த சந்ததிகள் அதைப் படித்து இதை உணரவேண்டும். அவ்வாறு நாம் அதைத் தவறவிடுவோமானால் எமது வரலாறு புதைந்துபோய்விடும். என்றார். (எ-21)

# அமிர்தலிங்கத்தின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 15

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் 30 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று வலிகாமம் மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், வட்டுக்கோட்டைத் தொகுதித் தலைவருமான ஈ.சரவணபவன் தலைமையில் காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. வலிகாமம் பிரதேச சபை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அமிர்தலிங்கத்தின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு, சுட்டியில் தீபம் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து வலி.மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் நினைவஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். அமிர்தலிங்கம் பற்றிய சிறப்புரை ஒன்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணித பேராசிரியர் சிறிசற்குண ராஜா நிகழ்த்தினார்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, முன்னாள் உறுப்பினர் பரஞ்சோதி, வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் நடனேந்திரன், மற்றும் சபை உறுப்பினர்கள், வலி வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன், வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன், காரைநகர்ப்பிரதேச சபைத் தவிசாளர், உபதவிசாளர் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைப் பேராசிரியர் திருமதி நாச்சியார், நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் இணைப்பாளர் செ.பிரதாப், பனை - தென்னை அபிவிருத்திச் சபைத் தலைவர், வட்டுக்கோட்டைத் தமிழ் அரசுக் கட்சி வாலிபர் முன்னணியின் தலைவர், செயலர் சுதாகரன், பண்ணாகம் வாழ் மக்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ-21)

















# பலாலியிலிருந்து தமிழகத்துக்கு நேரடியாக வானூர்த்தி சேவைகள்

## இந்தியா ஆர்வம் எனத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15
பலாலி வானூர்த்தி நிலையத்தில் இருந்து, தமிழ் நாட்டின் மதுரை அல்லது திருச்சி நகரங்களுக்கும் கேரளாவின் திருவனந்தபுரத்துக்கும் நேரடி வானூர்த்தி சேவைகளை நடத்த இந்தியா விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



பலாலி வானூர்த்தி நிலையத்தை தரமுயர்த்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு அரசு 1950 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது. இந்தியா 300 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது. தற்போது முதற்கட்டமாக ஓடுபாதையைச் சீரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
இந்தப் பணிகள் நிறைவடைந்ததும், குறைந்த கட்டண வானூர்த்தி நிறுவனங்கள் பயன்படுத்தும் நெருக்கமான ஆசனங்களைக் கொண்ட சிறிய வானூர்திகள் மூலம் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
பலாலி வானூர்த்தி நிலைய அபிவிருத்திப் பணிகள் நிறைவடைந்ததும், சிவில் வானூர்த்தி சேவைகள் நிறுவனத்தால், பன்னாட்டு வானூர்த்தி நிலையமாக இயக்கப்படவுள்ளது.
தற்போது பலாலி வானூர்த்தி நிலையத்தில் சுமார் 200 பயணிகளைக் கையாளக் கூடிய ஒரே ஒரு முன்னயம் மாத்திரமே உள்ளது.
இங்கிருந்து வான்படையின் சி130, ஏ.என்32, எம்.ஏ60 போன்ற வானூர்திகள் இயக்கப்பட்டு வருகின்றன.
ஆரம்பத்தில், சில குறைந்த கட்டண வானூர்திச் சேவைகள் இந்திய நகரங்கள் சிலவற்றுக்கே ஆரம்பிக்கப்படக் கூடும் என்றும், வான்படையே தொடர்ந்தும், வானூர்த்தி நிலையத்தை நிர்வகிக்கும் என்றும் கூறப்படுகிறது.
கடந்த ஆண்டு இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தால், 15 ஆயிரத்து 400 வணிக நுழைவிசைவுகளும், ஒரு லட்சத்து 21 ஆயிரம் சுற்றுலா நுழைவிசைவுகளும் வழங்கப்பட்டுள்ளன. (ஒ.5)

# பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் பல அகற்றப்பட்டன

சாவகச்சேரி , ஜூலை 15
சாவகச்சேரி நகரப் பகுதியில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை அப்புறப்படுத்தும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.
'பசுமை நிழல்கள்' அமைப்பின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு வீதியோரத்தில் காணப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.
சங்கத்தானை தொடருந்து நிலையத்திலிருந்து சாவகச்சேரி மருத்துவமனை வரையான சுமார் 500 மீற்றர் தூரத்தில் 30க்கும் மேற்பட்ட உரப்பைகள் நிறைந்த நிலையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் சேகரிக்கப்பட்டு சாவகச்சேரி நகரசபை வாகனங்கள் மூலம் வெளியேற்றப்பட்டன.
சாவகச்சேரி நகரப் பகுதியில் பொலித்தீன் பாவனையைக் குறைப்போம் என்னும் திட்டத்தை நகரசபையினர் நடைமுறைப்படுத்தி நகரப் பகுதியை தினமும் துப்பரவு செய்து வரும் நிலையில் சுமார் 500 மீற்றர் தூரத்தில் 30 உரப்பைகள் நிறையும் நிலையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் சேகரிக்கப்பட்டுள்ளமை வியக்கத்தக்க விடயமாக அங்கு பேசப்பட்டது.
தொடருந்து. பேருந்து உள்ளிட்ட வாகனங்களில் செல்வோர் வீதியோரத்தில் வீசும் பிளாஸ்ரிக் பொருள்களுடன் தற்போது வீசும் காற்றால் அள்ளுண்டு வரும் பொலித்தீன் வகைகளும் வீதியோரத்தில் காணப்படுகின்றன.
சாவகச்சேரி மருத்துவமனை தொடக்கம் பளை வரையிலான பகுதிகளின் தொடருந்து மற்றும் பேருந்து வாகனங்களில் செல்வோர் வீசும் குடிதண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் பொலித்தீன் பைகள் போன்றவை தொடருந்து சாலைக்கும் ஏ 9 முதன்மைச் சாலைக்குமிடையில் பெருமளவில் காணப்படுகின்றன. (த-9)



# காங்கேசன்துறை - காரைக்கால் பயணிகள் கப்பல் சேவை

## ஆரம்பிப்பதற்கு இலங்கை விரும்புகிறது

கொழும்பு, ஜூலை 15
இந்திய துறைமுகங்களுக்கு பயணிகள் கப்பல் சேவைகளை ஆரம்பிப்பதில், துறைமுக அதிகார சபை கவனம் செலுத்தியுள்ளதாக துறைமுக அதிகார சபையின் தலைவர் கவன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
"காங்கேசன்துறை மற்றும் காரைக் கால் துறை முகங்களை இணைக்கும் வகையிலும், அதுபோன்று கொழும்பு -தூத்துக்குடி துறை முகங்களை இணைக்கும் வகையிலும், இரண்டு பயணிகள் கப்பல் சேவைகளை ஆரம்பிப்பதன் மூலம், இருதரப்பு வணிகச் செயற்பாடுகள் மற்றும் சுற்றுலா வாய்ப்புகளை அதிகரிக்க முடியும்.
பயணிகள் கப்பல் சேவையின் மூலம், சுற்றுலாத் துறைக்கும், சிறிய அளவிலான வணிகத்துக்கும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.
தென்னிலங்கையில் இருந்து இந்தியாவுக்குப் பயணிக்கும் பௌத்த சுற்றுலாப் பயணிகளுக்கும் இது சாதகமாக இருக்கும்.
காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அருகாமையில் வாழும் சமூகங்களுக்கு வணிக வாய்ப்புகள் அதிகரிக்கும்.
அத்துடன், சீமெந்து போன்ற பொருள்களை மொத்தமாக நெடுஞ்சாலை மற்றும் தொடருந்து மூலம் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவைக் குறைக்க முடியும்" என்றும் அவர் கூறியுள்ளார்.
2011இல், தூத்துக்குடி- கொழும்பு இடையில் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டது. எனினும், வணிக ரீதியாக வெற்றியளிக்காததால், இந்தக் கப்பல் சேவையை நடத்திய தனியார் நிறுவனம், அதனை நிறுத்தியது.
தற்போது, அரசு காங்கேசன்துறை துறைமுகத்தை தரமுயர்த்தி வருகிறது.
இதற்காக, இந்தியாவின் எக்சிம்வங்கியிடம் இருந்து 45.27 மில்லியன் டொலர் பெறப்பட்டுள்ளது. (ஒ.5)

# கார்மேல் அன்னை திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 15
அல்லைப்பிட்டி புனித கார்மேல்அன்னை ஆலய வருடாந்தத் திருவிழாவில் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்குக் கார்மேல் அன்னையின் திருவிழா, திருப்பலியும் திருச் சொரூப தேர்ப் பவனியும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# 3 மாடுகள் திருட்டு ஒருவர் கைது

கொடிகாமம், ஜூலை 15
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலியில் மாடுகளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வீடு புகுந்து மூன்று மாடுகள் திருடப்பட்டுள்ளன என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை முறைப்பாடு செய்யப்பட்டது.
இதையடுத்து உடனடி நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார் கெற்பேலியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளனர்.
மேலதிக விசாரணை இடம்பெறுகிறது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறான சம்பவங்கள் ஆங்காங்கே தொடர்வதால் கால்நடை வளர்ப்போரை அவதானத்துடன் இருக்குமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-159)

# இசைத்தட்டு வெளியீடு

கொடிகாமம், ஜூலை 15
தென்மராட்சி வரணி இயற்றாலை நாலாவரை சிறி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நாலாவரை நாயகி கீதங்கள் இசைத் தட்டு வெளியிடப்பட்டது.
கடந்த 27ஆம் திகதி நடந்த மகா கும்பாபிஷேகத்தன்று இது வெளியிடப் பட்டது.
வன்னியூர் வரன் எழுதிய பாடலை இளம் இசையமைப்பாளர் பி. எஸ் விமல்ராஜ்ஜின் இசையில் நம் நாட்டு பாடகர் சந்திர மோகன் பாடியுள்ளார்.
இசைத் தட்டை ஆலய தர்மகர்த்தா சி.பாஸ்கரன் வெளியிட்டு வைக்க ஆலய தலைமைக் குரு சிவா ஐயர் பெற்றுக்கொண்டார். (த-159)

# களியாட்ட வரியை 5 வீதமாக்கலாமா?

## உள்ளூராட்சி சபைகளிடம் அவதானிப்பைக் கோருகிறது அமைச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 15
பாட்டுக் கலைஞர்களைப் பாதுகாப்பதற்காக கவிஞர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள் ஆகியோர் நடத்தும் நிகழ்வுகளுக்காக உள்ளூராட்சி சபைகள் அறவிடும் களியாட்ட வரியை 5 வீதமாகக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதனால், இது பற்றிய அவதானிப்பை அனுப்பிவைக்குமாறு உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சபைகளைப் பணித்துள்ளது.
கவிஞர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்கள் போன்றோரால் நடத்தப்படும் நிகழ்வுகளுக்காக உள்ளூராட்சி சபைகள் களியாட்ட வரியை அதிகளவில் அறவிடுகின்றன.
இதனால் கலைஞர்களுக்கு நன்மை ஏற்படாதுள்ளது. எனவே களியாட்ட வரியைக் குறைக்குமாறு அவுட்ஸ்ரான்டிங் கிறியேசன் நிறுவனத் தவிசாளர் கலாநிதி ஜயந்த தர்மதாச கோரிக்கை விடுத்துள்ளார்.
இந்தக் கோரிக்கை பற்றி தங்களின் அவதானிப்பு அறிக்கையை அனுப்பி வைக்குமாறு உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் கோரியுள்ளார். (த-9)

# 150 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 15
யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 150 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.
அங்குள்ள கலாசார மண்டபத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன. புலம் பெயர்ந்து நோர்வே நாட்டில் வாழும் பாலகிருஸ்ணன் முரளி அவர்களின் அனுசரணையில் யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகமும் யாழ்ப்பாண பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திசங்கங்களின் சமாசமும், இணைந்து இவற்றை வழங்கின.
கிராம அலுவலர்மூலம் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு கண்ணாடிகள் வழங்கும்நிகழ்வுயாழ்ப்பாணமாநகரசபை உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெற்றது. (த)





தென்மராட்சிப் பிரதேச

## கலாசார அதிகார சபையின் செயற்குழுக் கூட்டம் முதலாவது சனிக்கிழமைகளில்

சாவகச்சேரி, ஜூலை 15

தென்மராட்சிப் பிரதேச கலாசார அதிகார சபையின் செயற்குழுக் கூட்டம் மாதாந்தம் முதலாவது சனிக்கிழமை நடைபெறுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போது செயற்குழுக் கூட்டம் நடத்துவது தொடர்பாக ஆராயப்பட்டு கலைஞர்களின் விருப்பத்தின்படி மாதத்தின் முதலாவது சனிக்கிழமை நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்று பிரதேசசெயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக தலைவர் பதவி வழியாக பிரதேச செயலரும் உப தலைவராக இ.பிரதீபன், செயலர் து.குமரநாதன், உதவிச் செயலர் செ.மகேஸ்வரன், பொருளாளர் செ.சுதாகரன் ஆகியோரும் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (து-9,131)

## கதிரைகள் கையளிப்பு

கொடிகாமம் ஜூலை 15

கச்சாய் மகா வித்தியாலயத்துக்கு மண்டபக் கதிரைகள் பிரான்ஸ் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தினரால் அண்மையில் கையளிக்கப்பட்டன.

அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய அதிபர் கா.கந்தசாமி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியரும் கச்சாய் மகா வித்தியா லயத்தின் பழைய மாணவருமான சீ.கஜிதரன், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஜ-159)

# வீட்டுத் திட்டத்துக்காக காத்திருக்கும் பாரதிபுரம்

கிளிநொச்சி, ஜூலை 15

வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 8 மாதங்கள் கடந்துள்ள போதும் இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என்று கிளிநொச்சி, பாரதிபுரத்தைச் சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



தமக்குரிய வீட்டுத் திட்டத்தை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

கிளிநொச்சிக் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ள இடரில் 157க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. அவர்களில் பெரும்பாலானோர் தற்காலிகக் கொட்டகைகளில் வசித்து வந்த நிலையில் அவர்களுக்கு வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டம் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. வீட்டுத் திட்டத்துக்காக 79 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று பயனாளிகள் பட்டியலும் ஒட்டப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பங்களில் 30 பேர் நிரந்தர வீடுகளைக் கொண்டிருக்கின்றார்கள், ஏனையோரில் தனிநபர், அரச ஊழியர் என்பன போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு 79 பேர் இந்தப் பட்டியலில் உள்வாங்கப்பட்டனர் என்று கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவித்தன.



பயனாளிகள் பட்டியல் வெளியாகி 8 மாதங்கள் கடந்துள்ள போதும் இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"நாங்கள் இப்போதும் வறட்சி, வெள்ளம் என இயற்கை இடர்களுக்கு மத்தியிலே வாழ்கின்றோம். வீட்டுத் திட்டம் எமக்கு வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் இதுவரை அது வழங்கப்படவில்லை. வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இதுவரை வீட்டுத் திட்டம் வழங்கப்படாமைக்கான காரணம் என்ன? உரிய அதிகாரிகள் இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுத்து எமக்கு வீட்டுத் திட்டத்தை வழங்க வேண்டும்" என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-6)

## காரை. பிரதேச சபையில் மகேஸ்வரனுக்குச் சிலை

யாழ்ப்பாணம், ஜூலை 15

காரைநகர் பிரதேச சபை வளாகத்தில் மறைந்த இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரனுக்கு சிலை அமைக்க பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகள் அனுமதியளித்துள்ளனர்.

காரைநகர் பிரதேச சபையின் மாதாந்த சபைக் கூட்டம் கடந்த 10ஆம் திகதி பிரதேச சபையில் சபையின் தவிசாளர் வீ.கேதீஸ்வரதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது காரைநகரில் பல்வேறு சமய, சமூக, கல்வி, ஆன்மிகம் மற்றும் உட்கட்டுமானப் பணிகளில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்தி சேவை செய்த மூவரின் பெயர்களை சபை உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மறைந்த கலாநிதி ஆ.தியாகராசா மற்றும் சைவப் பெரியார் பண்டிதர் மறைந்த சிவசிறி க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் பெயர்கள் உருவச்சிலை அமைப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்டது.

இதில் கலாநிதி ஆ.தியாகராசா சிவசிறி க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோரின் உருவச் சிலைகள் அமைப்பது தொடர்பில் அவர்களின் உறவுகள் விரும்பாத நிலை குறித்தும் உறவுகள் அனுப்பிய கடிதம் தொடர்பிலும் பேசப்பட்டது.

இறுதியில் மறைந்த தி.மகேஸ்வரனுக்குக் காரைநகர் பிரதேச சபை வளவினுள் உருவச் சிலை அமைப்பது எனச் சபைத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுதவிர, காரைநகரில் பிரதேச சபை வளாகத்தினுள் உருவச் சிலை அமைப்பதற்கான முழுச் செலவையும் தாம் பொறுப்பேற்பதாக மறைந்த அமைச்சர் தி.மகேஸ்வரனின் சகோதரன் தி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். இதைக் கடிதம் மூலமாகத் தெரிவித்துள்ளார் என்று சபைத் தவிசாளர் வீ.கேதீஸ்வரதாஸ் தெரிவித்தார். (து-50)

## மணல் கொள்ளையை பிடிக்க வந்தேன் என வீடொன்றில் பதுங்கிய ஊழியர்

*எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டார்*

யாழ்ப்பாணம், ஜூலை 15

வீடு ஒன்றில் பதுங்கியிருந்த பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை ஊழியர் ஒருவர் அயல் வீட்டுக்காரரால் விசாரணைக்குட்ப டுத்தப்பட்டபோது, குறித்த ஊழியர் 'என்னைத் தெரியும்தானே அங்கிள்' என்று கூறியதால் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையில் கடமையாற்றும் ஊழியர் ஒருவர் இரவு நேரம் பச்சிலைக்பள்ளிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பதுங்கியிருந்துள்ளார்.

இதை அவதானித்த அயல் வீட்டுக்காரர் அவரைப் பிடித்து விசாரித்தபோது, அந்தப் பகுதியில் மணல் கொள்ளை இடம்பெற்றதாகத் தனக்கு தகவல் கிடைத்தது என்றும், அதனால்தான் பதுங்கியிருந்து அவதானித்ததாகவும் குறித்த ஊழியர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் என்னைத் தெரியும் தானே அங்கிள் என்றும் கேட்டுள்ளார். இதனால் மீண்டும் ஒருமுறை இவ்வாறு நடக்கக் கூடாது என்று எச்சரித்த அயல் வீட்டுக்காரர் அவரைவிடுவித்தார்.

மணல்கொள்ளையைப் பிடிப்பதற்கு பிரதேச சபையின் ஊழியர் எதற்கு இரவு நேரத்தில் பதுங்கியிருக்க வேண்டும் என்று சந்தேகம் வெளியிட்ட அந்தப் பகுதிமக்கள், பிரதேச சபை ஊழியருக்கு மணல்கொள்ளையைப் பிடிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்றும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அத்தோடு இரவு நேரங்களில் அந்தக் குடியிருப்புப் பகுதியில் இவ்வாறன நடமாட்டங்கள் இருக்கின்றன என்றும் மக்கள் அச்சமடைந்துள்ளனர். இது தொடர்பாக தவிசாளருக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பச்சிலைப்பள்ளி தவிசாளரிடம் கேட்டபோது சம்பவம் தமக்கு தொலைபேசி மூலமாக தெரிவிக்கப்பட்டதாகவும் இதுவரை எழுத்து மூலம் கிடைக்கவில்லை எனவும் பதிலளித்தார். (ஐ-21,6)

## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 15

சுன்னாகம் புதிய அஞ்சலகத்துக்கு 27 மில்லியன் ரூபா செலவில் இருமாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று 15ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு சி.குமாரவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகம், வடக்கு மாகாண துணை அஞ்சல் அதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என சுன்னாகம் நகர அபிவிருத்திச் சபை செயலர் சபா.புஷ்பநாதன் அறிவித்துள்ளார்.



வவுனியா வடக்கு, துணுக்காய், முல்லைத்தீவு வலய[illegible] களின் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கா[illegible] கணித, விஞ்ஞான பாட செயலமர்வு கடந்த 3ஆம் திக[illegible] நடைபெற்றது. மாங்குளத்திலுள்ள மாகாண தொ[illegible] னுட்பப் பயிற்சிக் கல்லூரியில் இது நடைபெற்றது. உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சக்திதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் கலந்துகொண்டார். மாணவர்களுக்குக் கடந்தகால வினாவிடைத் தொகுப்பும் வழங்கப்பட்டது. (து)

# பதவிக் கால விவகாரத்தில் பின்வாங்குகிறார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 15

தனது பதவிக்காலம் தொடர்பாக, உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரும் திட்டத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கைவிட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

19 ஆவது திருத்தச்சட்டம் 2015ஆம் ஆண்டு மே 15ஆம் திகதியே நடைமுறைக்கு வந்த நிலையில், தமது 5 ஆண்டு பதவிக்காலம் எப்போது தொடங்கி, எப்போது முடிகிறது என்று உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கேட்க அரச தலைவர் மைத்திரிபால திட்டமிட்டுள்ளார் என்று கடந்த வாரம் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலம் 18 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய 6 ஆண்டுகளா, அல்லது 19 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய 5 ஆண்டுகளா என்று ஏற்கனவே உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கேட்டிருந்தார்.

அதுகுறித்து முன்னாள் தலைமை நீதியரசர் பிரிய சாத்டெப்தலைமையிலான 5 நீதியரசர்களைக் கொண்ட அமர்வு விசாரணை நடத்தி, 12 பக்க விளக்கத்தை அரச தலைவருக்கு அனுப்பியிருந்தது.

இந்தநிலையிலேயே, தமது 5 ஆண்டு பதவிக்காலம் எப்போது தொடங்கியது என்று வினவ அரச தலைவர் திட்டமிட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகின.

எனினும், இவ்வாறு உயர் நீதிமன்றத்திடம் விளக்கம் கோர வேண்டாம் என்று அரச தலைவருக்கு அவரது சட்ட ஆலோசகர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

ஏற்கனவே உயர் நீதிமன்றம், அளித்திருந்த 12 பக்க விளக்கத்தில், ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரே அதனை தம்மால் மீளாய்வு செய்ய முடியும் என்று தெளிவாக கூறியிருந்தது.

19 ஆவது திருத்தம் இப்போது சட்டமாகி விட்ட நிலையில், திருத்தத்தின் செல்லுபடியாகும் தன்மை அல்லது அரசமைப்புத் தன்மையை விசாரிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு இல்லை என்று நீதியரசர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே, பதவிக்கால நீடிப்புத் தொடர்பாக உயர் நீதிமன்றத்தை அரச தலைவர் நாட முடியாது என, சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் உயர் நீதிமன்ற விளக்கத்தைக் கோரும் முடிவை மைத்திரிபால சிறிசேன கைவிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. (ஒ.5)



## கடற்படைத் தளபதிக்கு ஓராண்டு சேவை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 15

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வாவுக்கு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஒரு ஆண்டு சேவை நீடிப்பு வழங்கியுள்ளார்.

நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவருக்கு சேவை நீடிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

23 ஆவது கடற்படைத் தளபதியாக 2019ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி நியமிக்கப்பட்ட கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா ஓய்வு பெறவிருந்த நிலையிலேயே சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## அமெரிக்காவின் கொடையை பெற அமைச்சரவைப் பத்திரம்

கொழும்பு, ஜூலை 15

அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிதியத்திடம் இருந்து 480 மில்லியன் டொலர் கொடையைப் பெற்றுக் கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரம், எதிர்வரும் 22ஆம் திகதிக்குள் அமைச்சரவையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அடுத்தவாரம் நிதியமைச்சர் நாட்டில் இருக்கமாட்டார் என்பதால் அதற்கடுத்த வாரம், அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று, இந்த திட்டத்துடன் பணியாற்றும், அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மிலேனியம் சவால் நிறுவனத்துடன் செய்து கொள்ளும் உடன்பாட்டுக்கு அமைய இலங்கைக்கு ஐந்து ஆண்டுகளில் 480 மில்லியன் டொலர் கொடை அபிவிருத்தி நிதியாக கிடைக்கும்.

அமைச்சரவை ஒப்புதல் கிடைத்தவுடன் இந்த திட்டம் விரைவாக முன்னெடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் ஏரான் விக்ரமரத்ன தெரிவித்திருந்தார்.

உடன்பாட்டில் கையெழுத்திடுவதில் தாமதம் ஏற்பட்டால், திட்டம் சரிந்து போகவோ அல்லது வேறு இடங்களுக்கு நிதி ஒதுக்கப்படவோ மாட்டாது என்று திட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்படும் போது, இந்த திட்டம் நடைமுறைக்கு வரும், நாங்கள் திட்டத்தின் அடுத்த கட்டத்துக்கு முன்னேற முடியும், என்றும் அவர் கூறினார். (ஒ.5)



## அமெரிக்காவுக்கான தூதருடன் இராஜாங்கச் செயலர் பேச்சு

கொழும்பு, ஜூலை 15

அமெரிக்காவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள றொட்னி பெரேராவை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். கடந்த 11ஆம் திகதி இந்தச் சந்திப்பு வொசிங்டனில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, முக்கியமாக, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் பாதுகாப்பு துறை உறவுகளை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக, அலிஸ் வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல், நீதி, நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் குறித்த எமது கலந்துரையாடல் பாதுகாப்பான மற்றும் வளமான இலங்கையை ஊக்குவிப்பதாகவும், பகிரப்பட்ட மதிப்புகளை மேம்படுத்தும் நோக்குடையதாகவும் இருந்தது என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ.5)

## சர்ச்சைக்குரிய அமெரிக்க வானூர்தி கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்டது

கொழும்பு, ஜூலை 15

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தரையிறங்கிய சந்தேகத்துக்குரிய அமெரிக்க சரக்கு வானூர்தி நேற்றுமுன்தினம் காலை புறப்பட்டுச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வானூர்தி ஐக்கிய அரபு எமிரெட்சுக்கு புறப்பட்டுச் சென்றதாக, கட்டுநாயக்க வானூர்தி நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த வானூர்திகள் சரக்குகள் எதையும் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் இறக்கவில்லை என்று சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு, இந்த வானூர்தி ஆடைகளை கொண்டு செல்வதாகவும், அவற்றை அங்கு இறக்கிய பின்னர், அமெரிக்காவுக்குப் பயணிக்கும் என்றும் வானூர்தி நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், பஹ்ரெய்னுக்கு அருகிலேயே ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இருந்த போதும், எதற்காக கட்டுநாயக்க வானூர்தி நிலையம் வரை வந்தது என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வெஸ்ரேன் குளோப் எயர்லைன் நிறுவனத்துக்குச் சொந்தமான, மக் டோனெல் டக்ளஸ் 11ரக சரக்கு வானூர்தியே கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் தரையிறங்கியிருந்தது.

இந்த வானூர்தியில் அமெரிக்க போர்க்கப்பல்களுக்கு அனுப்புவதற்காக விநியோகப் பொருள்கள் எடுத்து வரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்கள் கிளப்பப்பட்டிருந்தன. (ஒ.5)

## உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு குண்டுகள் மில்ஹானின் தயாரிப்பு



கொழும்பு, ஜூலை 15

சவுதியில் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் ஆயுதப் பிரிவின் பொறுப்பாளராக இருந்த அஹ்மத் மில்ஹானே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பயன்படுத்திய குண்டுகளைத் தயாரித்திருப்பதாக தெரியவந்துள்ளது. பயங்கரவாத விசாரணைப்பிரிவு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போதே இது குறித்து சாட்சியம் வழங்கியுள்ளார்.

ஸஹ்ரான் தலைமையிலான இந்த பயங்கரவாத குழுவின் ஆயுத தயாரிப்புக்காக கிழக்கில் ஐந்து வீடுகளை வாடகைக்கு எடுத்துள்ளனர். கல்முனையைச் சேர்ந்த சியாம் மற்றும் முகமது நிசான் இதற்கு உதவியுள்ளதாகதெரியவந்துள்ளது.

நீர்கொழும்பில் தயாரிக்கப்பட்ட வெடிபொருள்கள் லொறியொன்றின் மூலம் சம்மாந்துறைக்கு கொண்டு செல்லப்பட்டன. அதன் சாரதியான பிரசன்னா என்பவரிடம், தங்கத்தை சுத்தம் செய்யும் இரசாயனங்கள் எனக்கூறியே பீப்பாய்கள் ஏற்றப்பட்டுள்ளன.

நீர்கொழும்பில் இருந்து சம்மாந்துறைக்கு வெடிபொருள்களை அனுப்பிய தேசிய தௌஹீத் ஜமாத்தைச் சேர்ந்த அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ.5)

# தமிழர்களின் பகுதிகளில் தேசியப் பாடசாலைகள்!

## கல்வி அமைச்சர் உறுதி



கொழும்பு, ஜூலை 15

தமிழ் மக்கள் அதிகமாக செறிந்து வாழும் பகுதிகளில் பாடசாலை பற்றாக்குறை இருப்பதனால் கொழும்பு மற்றும் வத்தளை நகரங்களில் புதிய தேசிய பாடசாலைகள் உருவாக்க திட்டமிட்டுள்ளோம் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

அத்துடன் யார் என்ன கூறினாலும் அனைத்து இனத்தவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து எமது அரசு செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வத்தளை ஹனுப்பிட்டி அருண் மாணிக்கவாசகம் இந்து தேசியப் பாடசாலை வளாகத்தை கல்வி அமைச்சுக்கு அன்பளிப்பு செய்தல் மற்றும் நான்கு மாடி கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் தமிழ் மொழியில் கல்வி நடவடிக்கை முன்னெடுக்கும் பாடசாலை தொடர்பாக பெரும் சிக்கல்கள் காணப்படுகின்றன. ஆகையால் புதிதாக தேசியப் பாடசாலைகள் உருவாக்க வேண்டும் என கல்வி அமைச்சுப் பொறுப்பை என்னிடம் வழங்கிய பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்படி தற்போது கொழும்பு தமிழ் மொழி மூலமான தேசிய பாடசாலைகளை புதிதாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். அதே போன்று வத்தளையிலும் இன்னுமொரு தேசிய பாடசாலையொன்றை நிர்மாணிக்கவுள்ளோம் -என்றார்.

இந்த நிகழ்வுக்கு தேசிய ஒருமைப்பாடு, அரச கருமமொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து மத விவகார அமைச்சர் மனோ கணேசன், கல்விஇராஜாங்கஅமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)

# ‘லேபலை’ மாற்றி மருந்துகள் விற்பனை

## எச்சரிக்கிறது மருத்துவ சங்கம்

கொழும்பு, ஜூலை 15
இலங்கையில் அனுமதிக்கப்படாத பல மருந்துப்பொருள்களை இறக்குமதி செய்து, அதில் உள்ள ‘லேபலை’ மாற்றி புதிய மருந்தாக சுகாதார அமைச்சால் மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்படுவதாக மருத்துவ சங்கத்தின் தலைவர் அநுரந்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுகாதார அமைச்சு போலி மருந்துகளை மருத்துவமனைக்கு விநியோகித்து, நோயாளர்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மருந்து வகைகளில் சிறுவர்களுக்கு வழங்கும் மருந்து வகைகளும் உள்ளடங்கியுள்ளன. இந்த ஊழல் செயற்பாடு குறித்து, அரச தலைவர் உள்ளிட்ட அரச முக்கியஸ்தர்களுக்கு 11 தடவைகள் முறையிட்டபோதிலும், இது குறித்து, எவ்வித விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்தப் போலி மருந்துக் கொள்வனவினால், நாட்டிற்கு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. இது மத்திய வங்கியின் பிணை முறிகள் மோசடியைவிட பாரதூரமானது - என்றார். (ஒ.5)



படுகொலை செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அ.அமிர்தலிங்கம் மற்றும் வெ.யோகேஸ்வரன் ஆகியோரின் 30ஆவது நினைவு, தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தலைமைப் பணிமனையில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. (ஒ.5)

# அடிப்படைவாதிகள் எவருக்கும் மகிந்த அரசில் இடமில்லையாம்

கொழும்பு, ஜூலை 15
அடிப்படைவாதிகளுக்கு பொதுமக்கள் முன்னணி தலைமையிலான அரசில் ஒருபோதும் இடம் கிடையாது. பொதுமக்கள் முன்னணியின் கொள்கைத்திட்டம் அடுத்த மாதம் 10ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
உத்தேசிக்கப்பட்டுள்ள அரச தலைவர் தேர்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் பொதுத்தேர்தலிலும் பொதுமக்கள் முன்னணியே வெற்றி பெறும் என்பதில் எதுவித மாற்றமும் கிடையாது. தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அனைத்து செயற்திட்டங்களும் தற்போது கிராமிய மட்டத்தில் இருந்து முன்னெடுக்கப்படுகின்றது.

பொதுமக்கள் முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்துப் பங்காளி கட்சிகளையும் ஒன்றினைந்து ஒருமித்த கொள்கையை உள்ளடக்கிய பொதுக் கூட்டணி தற்போது அமைக்கப்பட்டுள்ளது. கூட்டணியின் பொதுக் கொள்கைத்திட்டங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

அனைத்து இனத்தவர்களின் ஆதரவுடனே ஒரு ஜனநாயகமிக்க அரசு தோற்றம் பெற முடியும். பொதுமக்கள் முன்னணி சகோதர இனத்தவர்களுக்கு எதிராக செயற்படுகின்றது என்று ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்து போலியான அரசியல் பரப்புரைகளை முன்னெடுக்கின்றது. எவரும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக செயற்படவில்லை.

குற்றம் புரிபவர் எந்த இனத்தவர் என்பது முக்கியமல்ல. குற்றத்தின் பிரகாரம் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் குண்டுத்தாக்கு தலைத் தொடர்ந்து அதனுடன் தொடர்புடையவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்க ப்பட்டால் தண்டனை நிச்சயம் கிடைக்கப் பெற வேண்டும்.

அடிப்படைவாதிகளுக்கு பொதுமக்கள் முன்னணியில் ஒருபோதும் இடம் கிடையாது. இவர்களில் சிங்கள அடிப்படைவாதிகளாகக் கூடக் காணப்படலாம். சமூகத்தின் மத்தியில் வேற்றுமைகளை ஏற்படுத்தும் விதமாக சில ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அவை நிச்சயம் மாற்றியமைக்கப்படும் - என்றார். (ஒ.5,61)

see more news in NEWUTHAYAN.COM

## மன்னார் மருத்துவனைக்கு சென்று சார்ள்ஸ் எம்.பி. ஆய்வு

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனை நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னார் மருத்துவமனைக்குச் சென்று அங்குள்ள குறைபாடுகள் தொடர்பில் ஆய்வு செய்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் கந்தசாமி செந்தூர்பதிராஜா, பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஒஸ்மன் டெனி, மன்னார் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.காண்டிபன் மற்றும் மருத்துவனை அபிவிருத்திக் குழுவின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடினார்.

மருத்துவமனையில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகத் தலைமை அமைச்சருடனும், மத்திய சுகாதார அமைச்சருடனும் கலந்துரையாடி அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். (எ-56)

## இஸ்லாம் தொடர்பில் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களை கண்டுகொள்ளாத பௌத்த பீடங்கள்

### கவலைப்படுகிறது இஸ்லாம் புத்திஜீவிகள் சங்கம்

கொழும்பு, ஜூலை 15
இஸ்லாம் மதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஏனைய மத மக்கள் மத்தியில் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்கள் பரப்படுகின்றன. இது தொடர்பில் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களை கவனத்தில் எடுத்து இதற்கான தீர்வொன்றை வழங்க வேண்டும் என்று அகில இலங்கை இஸ்லாம் புத்திஜீவிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குர்ஆன் மற்றும் இஸ்லாமிய சட்டங்கள் குறித்து திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்கள் வெளியிட்டுள்ளமை குறித்து அகில இலங்கை இஸ்லாம் புத்தி ஜீவிகள் சங்கத்தினர் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர் வரகாகொட சிறி ஞானரத்ன தேரரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த சந்திப்பின் போதே இஸ்லாம் புத்திஜீவிகள் சங்கத்தால் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது அகில இலங்கை முஸ்லிம் புத்தி ஜீவிகள் சங்கத்தின் ஊடகச் செயலரால் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட குர்ஆன் மகாநாயக்க தேரரிடம் கையளிக்கப்பட்டது.

அநுநாயக்க மெதகம தம்மானந்த தேரர் இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர் அல்ல என்று குறிப்பிடுபவர்களுக்கு எதிராகத் தம்மால் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கை குறித்து இஸ்லாம் புத்தி ஜீவிகள் சங்க பிரதிநிதிகளிடம் கேள்வியெழுப்பினார்.

இஸ்லாமிய கல்வி முறைமைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து நீங்கள் கவனம் செலுத்தவில்லையா? என்றும் மகாநாயக்க தேரர் அவர்களிடம் கேள்வியெழுப்பினார். இதற்குப் பதிலளிக்கையில், அந்த விடயங்கள் கல்வி அமைச்சுக்கு கீழேயே காணப்படுகின்றன என்று குறிப்பிட்டார்கள்.

எனினும் மதம் சார்ந்த விடயங்களில் சமயப் புத்தகங்களில் என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது குறித்து நாம் அவதானம் செலுத்துவோம். நீங்களும் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவது நல்லது என்பதே எமது நிலைப்பாடு என்று மகாநாயக்க தேரர் தெரிவித்தார். (ஒ.5,31)

## அரச தலைவர் தேர்தல் பந்தயத்தை சிறுபான்மையினர் கோட்டைவிடக்கூடாது

### அமீர் அலி தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 15
எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் எனும் குதிரைப் பந்தயத்தில் சிறுபான்மையினராகிய நாம் கோட்டை விட்டு விடக்கூடாது என்று கால்நடை அபிவிருத்தி இராஜாங்க முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஏறாவூர் ஓட்டுப்பள்ளி பிரதேசத்தில் வாழ்வாதாரத் தொழிலை மேற்கொள்ளும் முகமாக இளம் பெண்களுக்கான தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறந்த அரசியலை செய்வதற்கு, சிறந்த நிர்வா கத்தை நடத்துவதற்கு, சிறந்த சேவைகளைச் செய்வதற்கு இனம், மதம், சாதி தேவையில்லை. சமூகம் பிளவு படக்கூடாது என்பதற்காக இனிவரும் காலங்களில் திட்டமிட்டுச் செயற்பட வேண்டியுள்ளது.

அரச தலைவர் தேர்தலில் நாங்கள் அவசரப்படக்கூடாது. ஓடும் குதிரையிலே எது நல்ல குதிரை என்று தேர்ந்தெடுப்பதுதான் நமது வேலை. இதனை நின்று நிதானித்து சிறந்த தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்.

நாங்கள் ஒருபோதும் பெரும்பான்மைச் சமூகத்துக்கு சவால் விடுக்கவில்லை, சமாதானச் செய்தியாக இதனை வெளியிடுகின்றோம்.

பெரும்பான்மை சமூகத்திலுள்ள பெரும்பாலானோர் சமாதானத்தை நேசிப்பவர்களாகவே இருப்பது எங்களுக்குப் பெருமை தருகிறது. அதனால் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம் - என்றார். (ஒ.5)

# தமிழ்ப் பணிப்பெண்ணின் இறப்பில் சந்தேகம்: நீதி கோரும் குடும்பத்தினர்



பசறை, ஜூலை 15
குவைத்தில் பணிபுரிந்த இலங்கைத் தமிழ்ப்பெண் திடீரென்று உயிரிழந்துள்ளார். அவரது இறப்பில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கும் மடுல்சீமை ஊவாக்கலை தோட்டத்திலுள்ள அவரது குடும்பத்தினர், இதற்கு நீதி கோரியுள்ளனர்.

இது பற்றி குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கும் முறையிடப்பட்டுள்ளது.

செல்லையா தமிழ்ச்செல்வி (வயது-49) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். குறித்த பணிப்பெண் பல வருடங்களாக குவைத் நாட்டில் பணியாற்றி வந்துள்ளார். இரு பிள்ளைகளின் தாயான இவர் இந்தமுறை இங்கு வந்து சென்ற பின்னர் தான் பணிபுரியும் வீட்டில் சிரமங்களை எதிர் நோக்குகின்றேன் என்றும் பொருத்தமான தீர்வைப் பெற்றுத் தருமாறும் தொழில் முகவர் நிறுவனத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக குவைத்துக்கான இலங்கை தூதரகத்தை அணுகி இருந்தாக முகவர் நிலையம் பணிப்பெண்ணின் கணவருக்கு தெரிவித்திருந்து.

இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி தமிழ்ச்செல்வி தீக் காயம் ஏற்பட்டு மூச்சு திணறி இறந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது. இவரது இறப்புத் தொடர்பில் கடந்த முதலாம் திகதியே தமக்கு அறிவிக்கப்பட்டதாக கணவர் திருச்செல்வம் தெரிவித்தார்.

சட்ட மருத்துவ அதிகாரியும் தனது அறிக்கையில் திடீர் இறப்பு என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் இறப்பில் சந்தேகம் இருப்பதால் தீர்வு பெற்று தருமாறு அவரின் குடும்பத்தினர் கோரியுள்ளனர். (த)



## நாடுதிரும்பினார் அரச தலைவர்!

கொழும்பு, ஜூலை 15
இங்கிலாந்துக்கான தனிப்பட்ட பயணத்தை முடித்துக் கொண்ட அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுள்ளார்.
டோஹா வில் இருந்து வருகை தந்த கட்டார் வானூர்தி சேவைக்கு சொந்தமான சொகுசு வானூர்தியில் அரசதலைவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
முக்கியமான பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்பதற்கு அரசதலைவர் வருகையை எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மைத்திரிக்கு எதிராக குற்றத் தீர்மானம்

## ஐ.தே.க. அதிரடி

கொழும்பு, ஜூலை 15

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றத்தீர்மானம் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவர தீர்மானித்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான பொறுப்புகளை அரச தலைவர் ஏற்றுக்கொண்டு இந்த விடயம் தொடர்பாக ஒரு பொது அறிக்கையை வெளியிட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்துள்ளார்.
இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்கினால் அரச தலைவருக்கு எதிராக குற்றத் தீர்மானத்தைக் கொண்டுவர தயாரென நாடாளுமன்ற இறுதி அமர்வில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருந்தார்.
இந்தத்தீர்மானத்தில் 3/1பங்கு அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 75 பேர் கையெழுத்திட வேண்டுமென கேட்டிருந்தார். இதற்குப் பதில் வழங்கும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 75 பேரிடம் தான் கையொப்பத்தை பெற்றுத்தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ.5)



திருகோணமலை, திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடமும், சிறுவர் மனவிருத்திப் பாடசாலையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை பணிமனை வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டது. கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஒ.5)

## கல்முனைக்கு கணக்காளர்: நீதிமன்றத்தை நாடும் முஸ்லிம்கள்

கொழும்பு, ஜூலை 15
கல்முனை வடக்கு தமிழ் பிரதேசசெயலகத்தை தரமுயர்த்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக, அதிகாரம்மிக்க கணக்காளர் ஒருவர் இன்று நியமிக்கப்படவுள்ளார்.
கல்முனை விவகாரம் தொடர்பாக ரணில் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சருடன் கூட்டமைப்பு நடத்திய சந்திப்பையடுத்து, கணக்காளரை நியமிக்க அரசு சம்மதித்திருந்தது.
இந்தநிலையில், கல்முனை விவகாரம் தொடர்பான வழக்கு உயர்நீதிமன்றத்தில் நீடித்து வரும் நிலையில், கல்முனை கணக்காளர் நியமனத்துக்கு இடைக்கால தடை விதிக்க, கல்முனை மறுமலர்ச்சி ஒன்றியம் அமைப்பின் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிகிறது. (ஒ.5)

# மகிந்த ஆட்சியிலிருந்திருந்தால் குண்டு வெடிப்பே நடந்திருக்காது

## கூறுகிறார் பந்துல



கொழும்பு, ஜூலை 15
நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் ஆட்சி நடைபெற்றிருந்தால் தொடர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றிருக்காதென நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.
ஹோமாகமவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஐக்கிய தேசியக் கட்சியுடன் பல இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியில் இணைந்து பயணித்தோம்.
இதன்போது நாட்டை கட்டியெழுப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டபோதே ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து செயற்பட முடியாதென கூறி திடீர் மாற்றத்தை அரசதலைவர் ஏற்படுத்தினார்.
அதாவது, மகிந்த ராஜபக்சவிடம் நாட்டை கட்டியெழுப்புவதற்காக அதிகாரத்தை வழங்கினார். இதன்போது அரசதலைவர் நாடாளுமன்றத்தை கலைத்து வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான நாளையும் அறிவித்திருந்தார். அவ்வாறு நடந்திருந்தால் எப்போதோ ஐக்கிய தேசியக் கட்சி வீட்டுக்கு சென்றிருப்பதுடன் மகிந்தவின் ஆட்சி நாட்டில் நிலவி இருக்கும்.
அதனைத் தொடர்ந்து மகிந்தவால் நடத்தப்பட்ட பாதுகாப்பு கூட்டங்களிலேயே ஸஹ்ரான் உள்ளிட்ட தீவிரவாத குழுக்களின் பெயர்களும் வெளி வந்திருக்கும். பயங்கரவாத தாக்குதல்கள் தடுக்கப்பட்டிருக்கும் இதேவேளை கடந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத் தின்போது மக்கள் விடுதலை முன்னணி எவ்வாறு செயற்பட்டது என்பதற்கு பதிவு செய்யப்பட்ட சான்றுகள் உள்ளன.
அந்தவகையில் எது எவ்வாறாயினும் அரசமைப்புக்கு அமைய இந்த டிசெம்பர் மாதம் அரச தலைவர் தேர்தலை நடத்த வேண்டும் - என்றார். (ஒ.5)

### தமிழ் பேசும் மக்கள் என்ற நிலையில்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் பங்காளிகளாகவுள்ளோம்

*மன்னார் குடி மக்கள் குழு ஆளுநர் தெரிவிப்பு*

தலைமன்னார், ஜூலை 15
தமிழ் பேசும் மக்கள் என்ற நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் துன்பத்திலும் அவர்களின் போராட்டத்திலும் நாம் பங்காளிகளாக இருந்து நீதி நியாயத்துக்காகப் போராடுகின்றோம் என்று மன்னார் மாவட்ட குடிமக்கள் குழு ஆளுநரும் நிர்வாக உறுப்பினருமான மன்னார் மூர் வீதி பள்ளி வாசல் மௌலவி எஸ்.ஏ. ஆசீம் தெரிவித்தார்.
மன்னார் குடிமக்கள் குழு மற்றும் மன்னார் நகர சபை ஆகியோரின் அனுசரணையுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மேற்கொண்ட போராட்டம் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
இந்த நிலையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த பத்து வருடங்களாக வடக்கு - கிழக்கு பகுதிகளில் பிரிந்து நிற்கும் தங்கள் உறவுகளுக்காக, நீதி நியாயத்துக்காக ஏங்கிக் கொண்டு போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.
தமிழ் பேசும் மக்களாகிய நாங்களும் இவர்களின் துன்பங்களிலே போராட்டத்திலும் பங்கு கொண்டவர்களாக நீதிநியாயத்துக்கான போராட்டத்தில் பங்காளிகளாக இருக்கின்றோம்.
2009 ஆம் ஆண்டில் சமாதான நிலை உருவாகி தற்பொழுது பத்து வருடங்கள் கடந்து சென்றும் இன்னும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்காக வீதிகளில் இருந்து கொண்டு அரசுக்கும் பன்னாடுகளுக்கும் குரல் கொடுத்து வருகின்றனர்.
இந்த அரசு நீதியை நிலைநாட்ட வேண்டும் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.
காணாமல் ஆக்கப்பட்டோர் இன்னும் உயிருடன் இருக்கின்றார்களா இல்லையா என்பதை அரசு உறுதிபடத் தெரிவிக்க வேண்டும் -என்றார். (த-60)

## தமிழ் அரசுக் கட்சியோடு இணையுமாறு புலம்பெயர் இளையோருக்கு அழைப்பு

கிளிநொச்சி, ஜூலை 15
புலம்பெயர் தேசங்களில் இருக்கும் இளைஞர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிச் செயலர் சு.சுரேன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது
தமிழீழ விடுதலைப் புலிகள் அரங்கில் இல்லாத நிலையில், அவர்களுக்கு அடுத்தபடியாக தமிழ் இனத்தின் உரிமைக்காகவும், இயல்பு வாழ்க்கைக்காகவும், அர்ப்பணிப்போடு சேவையாற்றும் கட்சியும், தேசியத் தலைவரின் வழிப்படுத்தலில் உருவாக்கப்பட்டதுமான கட்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு காணப்படுகின்றது.
பல்வேறுபட்ட நபர்களுடைய தாக்குதல்கள், வசை பாடல்கள், சேறு பூசல்களுக்கும் மத்தியிலும் தனிப்பெரும் கட்சியாக, தமிழ் மக்களினுடைய ஏகோபித்த கட்சியாக தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு பயணித்துக் கொண்டிருக்கின்றது.
புலம் பெயர் உறவுகளும் இளைஞர்களும் இலங்கை தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தாயகம் நிம்மதியாக விடுதலை அடையும் வரை செயற்பட முன்வர வேண்டும் என வேண்டுகின்றேன் - என்றார். (எ-6)

# புலனாய்வுத்துறை அதிகாரிகளிடம் இரகசியமாக சாட்சியங்கள் பதிவு

கொழும்பு, ஜூலை 15
எதிர்வரும் 24ஆம் திகதி புலனாய்வுத்துறை அதிகாரிகளின் சாட்சிப் பதிவுகளை இரகசியமான முறையில் மேற்கொள்வதற்கு தாக்குதல் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது.
இந்த விடயம் குறித்து சிறப்பு வேலைத்திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அது குறித்த அமர்வை அறிக்கையிடுவதற்கு ஊடகங்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்று தெரிவுக்குழுவின் தலைவர் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.
இதேவேளை, புலனாய்வுத் துறை அதிகாரிகளை ஒளிப்படம் எடுப்பதற்கும் எவருக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
எதிர்வரும் 24ஆம் திகதி, அரச புலனாய்வு சேவை பிரதானி, மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன, குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரட்ன மற்றும் அதன் பணிப்பாளரான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சானி அபேசேகர ஆகியோர் சாட்சியமளிக்க உள்ளனர்.
அதேநேரம், பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளரான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வருண ஜயசுந்தர மற்றும் அதன் பொலிஸ் பரிசோதகர் தரங்க பத்திரண ஆகியோரும் எதிர்வரும் 24ஆம் திகதி சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# ண்ணார்பண்ணை
# ளி அம்மன் தேவஸ்தானம்
# றப்பிதழ் - 15.07.2019



ின் வீரத்தையும் போர் வெற்றியையும் இன்றும் நினைவு கூரும் ிய மன்னன் பயன்படுத்திய வாள் கொண்டு விஜயதசமி தினத்தில் த்தில் வாழைமரம் வெட்டப்படுகிறது. அம்பிகை மகிடாசுரனை வதம் ிஜயதசமி ஆகும். அம்பிகைக்கும் மகிடாசுர னுக்கும் இடையில் 9 டைபெற்றதாக இதிகாசம் உரைக்கின்றது. போரில் பலவீன மடைந்த ி மரத்திற்குள் ஒளிந்தான். 10ஆம் நாள் அம்பிகை வாள் கொண்டு செய்து போரில் வெற்றிபெற்றாள். இன்றும் வாழை மரத் தில் களைப் பிணைத்து வெட்டிஅந்த மரபை நினைவூட்டுகி றார்கள்.

கிரகத்தில் உள்ள கருங்கல் விக்கிரகம் கருணாம்பிகை வடிவத்தில் ுள்ளது. இடது திருவடியை ஊன்றி, வலது திருவடியை மடித்து னத்தில் எழுந்தருளியுள்ளஅம்மை 8 திருக்கரங்கள் உடையவள். ிலை அழிக்க முனையும் போது கோயில் வாசலில் பெரிய சிங்கம் ச்சித்து பறங்கியரை விரட்டியதாக ஐதீகம் உண்டு. இக்கோயில் ான வேடிக்கைகளுடனும் கேளிக்கை கொண்டாட்டங்களுடனும் ்களுக்கு ஒப்பாக நடைபெறும் வழக்கம் உண்டு. கொடியேற்றம். ா, சப்பறம். தேர் மற்றும் தீர்த்தம் ஆகியன சிறப்புப் பெற்ற உற்சவ . இவ்வாறு யாழ்ப்பாண இராசதானியுடன் நெருங்கிய ு வீரத்தின் அடையாளமாக விளங்கிய வீரமாகாளி அம்மன் ஆலயம் கயில் சிறப்புப் பெற்ற சக்தி ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

## அருளாசிச் செய்தி

ஆதிபராசக்தியான அம்பிகை வீரமாகாளியாக எழுந்தருளி வீற்றிருந்து ருள்பாலிக்கும் தலம்தான் யாழ். வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம். இந்த ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா அழகான சித்திரத் ார பூஜிதையாக அற்புதமாக ஆரோகணித்துவரும் அம்பிகையின் அடங்காது.

பிரம்மாண்ட நாயகியான அம்பிகை வீரமாகாளி இன்று தேரிலே ஏறி ும் பாங்கான காட்சி காணக் கண்கோடி வேண்டும். தேர் வடம் பிடித்தி த்திலே இடம்பிடிக்கலாம் என்பது அடியார்களின் ஆழ்ந்த நம்பிக்கை.

த்தில் ரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே அநியாயங் ங்களையும் ஆணவத்தையும் அகங்காரத்தையும் அழித்து அருளை அம்பிகையாம் வீரமாகாளியின் தேர்த்திருவிழா சிறக்க அருளாசிகள் ுகின்றோம். அன்னையின் அருள் அனைவர்க்கும் கிட்டவேண்டு ப் பிரார்த்தித்து ஆசி நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஆதீன குருமுதல்வர்**
**ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.**

## ஆசியுரை



தமிழ் மன்னர்களால் வீரத்தெய்வமாக போர் வெற்றி வழிபாடுகளுக்கு இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளிற்கு முன்னர் இலங்கை திருநாட்டின் வடபால் வட வாயிற் கிழத்தியாக பிரதிஷ்டை செய்யப்பட்ட வரலாற்று பெருமையுடைய அன்னை வீரமாகாளி தாயார் இன்று இரதம் ஏறகின் றார். இரதோற்சவமானது பஞ்ச கிருத்தியர்யங் களில் அழித்தல் தொழிலை குறிப்பதாகும் எம்முன் செறிந்து காணப்படுகின்ற ஆணவம் என்ற மலத்தை அழித்து மனித வாழ்வியலை மாட்சிமை பெற செய்கின்றது. அக்னியானது தனது சக்தியால் அனைத் தையும் நீராக்கி விடுகின்றது. இதன் காரணமாகதான் அழித்தல் தொழிலை குறிக்கின்ற இரதமானது அக்னியின் சுவாலை வடிவிலேயே நிர்மாணிக்கப்படுகின்றது. சூரியர் சந்திரர்கள் சில்லாகவும் நான்கு வேதங்கள் குதிரையாகவும் இரதத்தில் அமைய பெறுகின்றது. இவ்வாறாக 36 தத்துவங்களையும் தன்னகத்தே சுமந்து நிற்கின்ற இரதத்திலே அன்னை வீரமாகாளி ஆரோ கணித்திருக்கின்ற வேளையில் தேர்வடம் பிடித்து எமது துன்பங்களை எல்லாம் நீக்கமற செய்து இம் மண் ணிலே நல்ல வண்ணம் வாழ வழி சமைத்து கொள் வோமாக இப் புண்ணிய நாளிலே இப் பிரபஞ்சத்தில் வாழுகின்ற அனைத்து ஜீவராசிகளும் இன்புற்று வாழவும் நாட்டில் சாந்தி சமாதானம் நிலவ வும் எம் குல தெய்வமாம் அன்னை வீரமாகாளி தாயை பிரார்த்தித்து இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என பணிகின றேன்.

வீரமாகாளியை சரண்புகுந்தால் வீரசக்தி பெறலாம்

**கிரியா போதக அனுபூதி**
**கிரியா திலகம்**
**சாமஸ்ரீ தேசமான்ய**
**இராஜஸ்ரீ. சிவ. கமல்ராஜ் குருக்கள்**
**பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்**
**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன்**
**தேவஸ்தானம்**

## " அம்பிகையைசரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம் "



சங்கிலிய மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டு நல்லூர். ராஜதானியின் எல்லைத் தெய்வமாக வேண்டுவோர் வேண்டுவதை நிறைவேற்று வதற்காக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் எழுந்தருளி அருளாட்சி புரியும் வீரமாகாளி அன்னையின் வருடாந்த மகோற்சவம் நிகழ்வதையிட்டு இவ்வாலய மூத்தகுரு என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன். ஏறத்தாழ 50 இற்கும் மேற்பட்ட ஆண்டு காலமாக எமது ஆலயத்தில் நித்திய. நைமித்திய மற்றும் வருடாந்த உற்சவ நிகழ்வுகளை சிறப்புற நடத்தி அன்னை வீரமாகாளிக்கு பணிவிடை செய்து வந்ததையிட்டு பெருமிதம் அடைவதோடு 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மகோற்சவம் 18 நாள்கள் சிறப்புற நிறைவுற்ற நிலையில் இன்று .(15.07.2019) திங்கட்கிழமை தேரேறி பவனிவரும் அன்னையின் திருவருட் கடாட்சத்தை அனைத்து பக்தகோடிகளும் பெற்றுய்யுமாறு அன்னையை பணிந்து ஆசி கூறுகின்றேன்.

**ஆலய மூத்தபிரதம குரு**
**ஆகமகிரியாஜோதி**
**சிவஸ்ரீ.சி.செல்வராசா குருக்கள்.**

## " அம்பிகையைசரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம் "



ஈழநாட்டின் முடிபோல் விளங்கும் யாழ்ப்பாணம் எனும் சிவபூமியில் பழம் பெருமை வாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றான வண்ணையம்பதியில் எழுந்தருளி வழிபடும் அடியார் களின் இன்னல்களையும் இடுக்கண்களையும் களைந்து கருணையே வடிவான அம்பிகையின் போரருட் கருணையின் துணைகொண்டு நிகழும் மங்களகரமான வருடம் 22.06.2019 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 நாள்கள் நிறைவுற்ற நிலையில் இன்று 15.07.2019 திங்கட்கிழமை அன்னை தேரிலேறி பக்தர்களுக்கு அருள் மழை பொழியும் தேர்த்திருவிழா நிகழவுள்ளதையிட்டு மகிழ்வுறுவதுடன் இத்தி னத்தில் பக்த அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு அன்னையின் அருள் பெறவேண்டுமென்றும் அகிலாண்ட கோடிபிரமாண்ட நாயகியான அன்னை ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் திருவருட்கடாட்சம் எல்லோருக்கும் பரிபூரணமாக கிடைக்கவேண்டும் என்றும் அம்பிகையின் பாதார விந்தங்களை பணிந்து நிற்கின்றேன்.

**ஆலய பிரதமகுரு தேவிசாதகப்பிரியன்**
**"கிரியா ஜோதி "**
**சிவஸ்ரீ.நா.சிவதர்ஷக்குருக்கள்.**

Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt.)Ltd.
YOGIS BEAUTY

75 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். Amman Road, Nallur, Jaffna.
021 222 2796. 0777 164 923
yogisbeauty@gmail.com www.yogisbeauty.com

கிருஷ்ணா நகை மாளிகை


தங்கப்பவுண் நகை வியாபாரம்
அசல் 22 கரட் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
KRISHNA
JEWELLERY
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5046

LINGAA FASHION

லிங்கா பெஷன்
302A, Temple Road, Jaffna.
Tel: 021 221 4999
www.facebook.com/lingaa.lk
www.lingaa.lk

நியூட்டன் எலக்ரிக்கல்
NEWTONE ELECTRICAL

169, Sir Pon Ramanathan Rd, Thirunelveli South, Jaffna.
Phone : 021 222 2037,
Cell : 077 061 0280.

J.TUNE ஜே.ரியூன்

Photocopy, Reload, Bus Booking, Net Call, Tamil, English DVD Movies.
270, Point Pedro Road, Anaipanthy.
270, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
Tel: 021 222 1141, 075 5034677

E-CITY FEEL BRILLIANT FUTUTE
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
Srilanka's NO.#1 English Language, Other Languages and Computer Training Centre
#372D, Pointpedro Road, Anaipanthi, Jaffna, Sri Lanka.
Tel : +94 21 221 7106
Mobile : +94 77 340 0418
Email : ecitycollege@gmail.com
Web : www.ecityenglish.com
facebook E-CITY
The Leading Centre For English Language Studies

## குடியியல் நடைமுறைக் கோவை பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்
## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல.: காணி /591 /2019
பெறுமதி : ரூ.5,000,000/-
நடைமுறை : சாதாரணம்

1. **வண.தேவசகாயம் தேவநேசன்**
தலைவர்,
அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை
மத்திய அலுவலகம், ஆசிய இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
2. **வண. ஜெகநாதன் அன்ரனி சுதாகர்**
செயலாளர்,
அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை மத்திய அலுவலகம்,
ஆசிய இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
3. **திரு. றோய் விஜயராஜா விஜயரட்ணம்**
பொருளாளர்,
அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை மத்திய அலுவலகம்,
ஆசிய இல்லம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

-வழக்காளிகள்-

எதிராக

வண. இந்திரதாஸ் இராஜ்குமார்,குருமனை,
அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை,
மானிப்பாய் வீதி, உடுவில்.

-எதிராளி

**அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை (CACM)- கூட்டிணைக்கப்படாத அமைப்பின் அங்கத்தவர்களுக்கு,**

**மேற்குறித்த வழக்கானது மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளிகளால் மேலே பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் எதிராளிக்கு எதிராக பின்வரும் நிவாரணங்களை வேண்டித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது:**

அ. வழக்காளிகள் / CACM இன் போதகரான எதிராளி,
i. CACM இன் முகவராகவே அதன்சார்பில் செயற்படுகிறார் என்ற பிரகடனமும்,
ii. திருச்சபை / மிசன் மற்றும் ஆதன அட்டவணைகளில் விவரிக்கப்பட்டுள்ள குருமனை அல்லது நலன்களை சுயாதீனமாக உடைமை கொள்வதற்கோ அல்லது அங்கு தங்கியிருப்பதற்கோ சட்டப்படி உரித்து அற்றவர் அல்லது இனிமேலும் உரித்து அற்றவர் என்ற பிரகடனமும்.

ஆ. முதல் நிலையில், எதிராளியோ அல்லது அவரது முகவர், வேலையாட்கள், பிரதிநிதிகள், நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அவர் சார்பிலோ அவரூடாகவோ வேறு எவருமோ குறித்த உடுவில் திருச்சபையிலும் அதனுடன் சேர்ந்த அல்லது ஆதன அட்டவணைகளிற் குறிப்பிடப்பட்ட நலன்களான இளையதம்பி இல்லம், அல்லது மற்றும் குருமனை அல்லது மற்றும் கல்லறைத்தோட்டம் ஆகியவற்றில் எந்தவொரு சமய நடவடிக்கையையோ, நிர்வாக நடவடிக்கைகளையோ வேறு நடவடிக்கைகள் எதனையுமோ மேற்கொள்ளவோ அல்லது அவ்வாறு செய்வதற்கு வேறு எவரையும் அனுமதிக்கவோ கூடாது எனக் கட்டுப்படுத்தும் கட்டாணையும்.

இ. இந்த வழக்கில் விசாரணைகள் முடிவுற்று விண்ணப்பம் தீர்மானிக்கப்படும் வரையில் எதிராளியோ அல்லது அவரது முகவர், வேலையாள்கள், பிரதிநிதிகள், நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அவர் சார்பிலோ அவரூடாகவோ வேறு எவருமோ குறித்த உடுவில் திருச்சபையிலும் அதனுடன் சேர்ந்த அல்லது ஆதன அட்டவணைகளிற் குறிப்பிடப்பட்ட நலன்களான இளையதம்பி இல்லம், அல்லது மற்றும் குருமனை அல்லது மற்றும் கல்லறைத் தோட்டம் ஆகியவற்றில் எந்தவொரு சமய நடவடிக்கையையோ, நிர்வாக நடவடிக்கைகளையோ வேறு நடவடிக்கைகள் எதனையுமோ மேற்கொள்ளவோ அல்லது அவ்வாறு செய்வதற்கு வேறு எவரையும் அனுமதிக்கவோ கூடாது எனக்கட்டுப்படுத்தும் இடைக்காலத் தடைக்கட்டளையும்.

ஈ. எதிராளியோ அல்லது அவரது முகவர், வேலையாள்கள், பிரதிநிதிகள், நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அவர் சார்பிலோ அவரூடாகவோ வேறு எவருமோ குறித்த உடுவில் திருச்சபையிலும் அதனுடன் சேர்ந்த அல்லது ஆதன அட்டவணைகளிற் குறிப்பிடப்பட்ட நலன்களான இளையதம்பி இல்லம், அல்லது மற்றும் குருமனை அல்லது மற்றும் கல்லறைத்தோட்டம் ஆகியவற்றில் எந்தவொரு சமய நடவடிக்கையையோ, நிர்வாக நடவடிக்கைகளையோ வேறு நடவடிக்கைகள் எதனையுமோ மேற்கொள்ளவோ அல்லது அவ்வாறு செய்வதற்கு வேறு எவரையும் அனுமதிக்கவோ கூடாது எனக் கட்டுப்படுத்தும் நிரந்தரத்தடைக் கட்டளையும்.

உ. CACM இன் அல்லது அதன் முகவர்களின், குறித்த உடுவில் திருச்சபை, மற்றும் அல்லது குருமனை அல்லது ஆதன அட்டவணைகளில் விவரிக்கப்பட்டுள்ள ஏனைய நலன்களையோ அல்லது ஏதாவது பகுதியிலோ உடைமை கொள்ளும் உரிமை மற்றும் அல்லது நிர்வாகத்தில் அல்லது அவ்வாறான உரிமைகளைச் செயற்படுத்தும் வேளைகளில் எதிராளியோ அல்லது அவரது முகவர், வேலையாட்கள், பிரதிநிதிகள், நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அவர் சார்பிலோ அவரூடாகவோ வேறு எவருமோ இடையூறு விளைவிக்கவோ அல்லது தடைசெய்யவோ கூடாது என அவர்களைக் கட்டுப்படுத்தும் கட்டாணையும்.

ஊ. CACM இன் அல்லது அதன் முகவர்களின், குறித்த உடுவில் திருச்சபை, மற்றும் அல்லது குருமனை அல்லது ஆதன அட்டவணைகளில் விவரிக்கபட்டுள்ள ஏனைய நலன்களையோ அல்லது ஏதாவது பகுதியிலோ உடைமை கொள்ளும் உரிமை மற்றும் அல்லது நிர்வாகத்தில் அல்லது அவ்வாறான உரிமைகளைச் செயற்படுத்தும் வேளைகளில் எதிராளியோ அல்லது அவரது முகவர், வேலையாட்கள், பிரதிநிதிகள், நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அவர் சார்பிலோ அவரூடாகவோ வேறு எவருமோ இடையூறு விளைவிக்கவோ அல்லது தடை செய்யவோ கூடாதுஎன அவர்களைக் கட்டுப்படுத்தும் இடைக்காலத் தடைக் கட்டளையும்.

எ. CACMஇன் அல்லது அதன் முகவர்களின், குறித்த உடுவில் திருச்சபை, மற்றும் அல்லது குருமனை அல்லது ஆதன அட்டவணைகளில் விபரிக்கபட்டுள்ள ஏனைய நலன்களையோ அல்லது ஏதாவது பகுதியிலோ உடைமை கொள்ளும் உரிமை மற்றும் அல்லது நிர்வாகத்தில் அல்லது அவ்வாறான உரிமைகளைச் செயற்படுத்தும் வேளைகளில் எதிராளியோ அல்லது அவரது முகவர், வேலையாள்கள், பிரதிநிதிகள், நியமிக்கப்பட்டவர்கள் அல்லது அவர் சார்பிலோ அவரூடாகவோ வேறு எவருமோ இடையூறு விளைவிக்கவோ அல்லது தடைசெய்யவோ கூடாது என அவர்களைக் கட்டுப்படுத்தும் நிரந்தரத் தடைக் கட்டளையும்.

ஏ. 2018-12-06ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதி வரைக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபா 25.000/- வீதம் நட்டம்/ இழப்பீடும், சேர்ந்த பெறுமானத்தின் மீது, முழுத் தொகையும் செலுத்தி முடிக்கப்படும் வரையிலான வட்டியும்.

ஐ. பின்னே குறிப்பிடப்படும் CACM இன் உடைமைகள் மற்றும் விவரங்களைக் கையளிப்பதற்கான கட்டளையும்,
i. 14-12-2018ம் திகதி CACM- இன் உடுவில் திருச்சபையின் தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய் கிளை கணக்கு இல:101070151351 இருந்து மீளப் பெறப்பட்ட தொகை
ii. 2017 ஆண்டு டிசம்பர் மாதத்தில் கையிருப்புப் பணம்
iii. 2018ஆம் ஆண்டு ஜுலை, ஒகஸ்ட் மாதங்களுக்குரிய கொடுப்பனவுச் சீட்டுக்கள்
iv. உடுவில் CACM-இன் வங்கிக்கணக்குப் புத்தகங்கள் மற்றும் நிலையான வைப்புச் சான்றிதழ்கள்
v. ஆலயக் குருவானவரின் அறிக்கையேடு

ஒ. குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 16ஆம் பிரிவின் கீழ் இவ்வழக்கு தொடர்பான அறிவித்தலை பத்திரிகையில் அல்லது நீதிமன்றம் கட்டளையிடும் பிரகாரம் பிரசுரிப்பதற்கான கட்டளையும்

ஓ. செலவு மற்றும்

ஔ. கௌரவ மன்றுக்கு நீதியும் நியாயமும் என தோன்றும் பிற நிவாரணங்களும்.

### குறித்த முதலாம் ஆதனஅட்டவணை

**குருமனை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தெற்குப் பகுதி, சுன்னாகம் கோயிற்பற்று, உடுவில் இறை, **" உடுவில் நல்லாயன் திருச்சபை- குருமனை"** உத்தேசமாக நிலப்பரப்பு நான்கும் (நிலப்: 04), குருமனையும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். இதன் எல்லைகள்:- கிழக்கும் மேற்கும் - ஒழுங்கை, வடக்கு –மானிப்பாய்- மருதனார்மடம் வீதி,தெற்கு –பாதையும், கதிரவேலு முத்துலிங்கத்தின் ஆதனமும், இவ்வெல்லைப்படி இதடங்கலும், இதற்குரியவைகளும்.

### குறித்த இரண்டாம் ஆதன அட்டவணை

**இளையதம்பி இல்லம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தெற்குப் பகுதி, சுன்னாகம் கோயிற்பற்று, உடுவில் இறை, **"இளையதம்பி இல்லம்"** உத்தேசமாக நிலப்பரப்பு நான்கும் (நிலப்: 04), வீடும், கட்டிடங்களும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். இதன் எல்லைகள் :- கிழக்கு- சேனாதிராசா கிரிசாந்தனின் ஆதனம், வடக்கு – மானிப்பாய்- மருதனார்மடம் வீதி, மேற்கு–பாலசிங்கம் பெண் சிறிஜெயந்தேவியின் ஆதனம், தெற்கு– சரவணபவன் ரவீந்தெராவின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும், இதற்குரியவைகளும்.

### குறித்த மூன்றாம் ஆதன அட்டவணை

**கல்லறைத்தோட்டம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் தெற்குப் பகுதி, சுன்னாகம் கோயிற்பற்று, உடுவில் இறை, "உடுவில் நல்லாயன் தேவாலய கல்லறைத்தோட்டம்" உத்தேசமாக நிலப்பரப்பு எட்டு (நிலப்: 08). இதன் எல்லைகள் :- கிழக்கு- றோமன் கத்தோலிக்கத் திருச்சபைச் சேமக்காலை, வடக்கும் மேற்கும் – றோட்டு, தெற்கு –வயல் நிலம். இவ்வெல்லைப்படி இதடங்கலும், இதற்குரியவைகளும்.

இவ்வழக்கானது 2019-07-22ம் திகதியன்று திறந்த மன்றில் அழைக்கப்பட இருக்கின்ற தென்றும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை (CACM) - கூட்டிணைக்கப்படாத அமைப்பின் அங்கத்தவர்கள் எவராவது இவ்வழக்கில் அக்கறையுடையவராக இருப்பின் 2019-07-22ம் திகதியன்று காலை 09.00 மணிக்கு தனிப்பட்ட ரீதியில் அல்லது சட்டத்தரணி ஊடாக கௌரவ மன்றில் தோன்றலாம் என இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**மன்றின் கட்டளைப்படி**

**பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்.**

**வரைவு:
வழக்காளிகளின் பதிவுபெற்ற சட்டத்தரணி**

நவீன முறையான
பாட்டிபுறொக் கடை திறப்பு விழா
முன்னாள் கௌரவ வடமாகாண முதலமைச்சர்
நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
அவர்களினால் திறந்து வைக்கப்படும்.
இடம் :- S.R.சசி தையலகம்
A9 வீதி, கைதடி.
காலம் :- இன்று (15.07.2019)
திங்கட்கிழமை
நேரம் :- 12.30 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
திரு.திருமதி சசிகுமார் ராஜி
077 429 9260

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**செல்வராசா கோணேஸ்**



பிறப்பு
13.03.1980

இறப்பு
30.06.2015


காலனவன் பறித்து ஆண்டுகள் நான்கு ஆனதுவே!
அன்பு அப்பாவே இன்னமும் இச் செய்தி பொய்யாகாதா? என்ற
உணர்வுகளோடு ஒவ்வொரு விடியலும் கடந்து சென்ற வழி
தேடி காத்திருக்கிறோம்
அப்பா! பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு என்றும்
நீங்கள் தெய்வமாக இருந்து
நல்வழிகட்ட என்றும் உங்களை நாடி நிற்போம் அப்பா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறையருளை வேண்டி நிற்கிறோம் அப்பா!

துயர்பகிரும்
கரந்தாய், பளை. மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### சீனிவாசகம் சரவணபவன்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்
Retired Station Master)



தோற்றம் 13.12.1928 மறைவு 13.07.2019

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் நவாலி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த சீனிவாசகம் சரவணபவன் லண்டனில் காலமானார்.

அன்னார் உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் - செல்லம்மா தம்பதியரின் புதல்வரும், நவாலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மருதலிங்கம், கனகம்மா (சிங்கப்பூர் அம்மா) தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற ஜெயந்தன் மற்றும் வாசுகி (கனடா), மாதினி (லண்டன்) ஆகியோரின் ஆருயிர் தந்தையும், சௌந்தரநாயகம், பாக்கியதாசன் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், சிவகாமசுந்தரி, பரமானந்தம், இரத்தினசிகாமணி, காந்திமதி, புவனேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் பிரியங்கா, காயத்திரி, வைஸ்னவி, வர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**வே. குருபரன் (சகோதரியின் மகன்),**
**சூர்யா பாமசி, அச்சுவேலி, புத்தூர்.**

**மாதினி (மகள்) 0044 7772 268717**
**0044 2083 360275**

## சாவுத்...

ஐயாயிரம் மகாவலி குடியேற்றவாசிகளுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் வளவை வல்யத்தின் வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்தின் விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாவுத் தண்டனையை நீக்குவதற்கு அரசில் உள்ள சிலரின் தேவையின் பேரில் நாடாளுமன்றத்தில் சட்டமொன்றை கொண்டு வருவதற்கு முயற்சிப்பதன் மூலம் வெற்றியடைவது நாட்டில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர்களும் குற்றவாளிகளுமே. போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் இந்த நாட்டின் இளம் தலைமுறையினரது எதிர்காலத்தை சீரழிப்பதற்கு நான் இடமளிக்க போவதில்லை. போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன். சாவுத் தண்டனை வழங்குவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை. சாவுத் தண்டனை நாட்டுக்கு அவசியமானது. நாட்டையும் இளந் தலைமுறையினரையும் நேசிக்கின்றவர்கள் மத்தியில் விரிவான மக்கள் ஆதரவை கட்டியெழுப்ப வேண்டும். இந்த நோக்கத்துக்காக ஒன்றிணையுமாறு நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## யாழுக்கு...

வரவுள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெறும் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகவே அவர் இன்று வருகின்றார். காலை 9 மணி முதல் நண்பகல் 11.30 மணிவரை குறித்த நிகழ்வில் அவர் பங்கெடுக்கவுள்ளார். (ம)

## விபத்தில்...

விபத்துக்கு உள்ளானதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 8 பேர் காயமடைந்தனர்.

முல்லைத்தீவு கோப்பாபிலவு பகுதியில் நிலைகொண்டுள்ள 59ஆவது படைத்தலைமையகத்துக்கு முன்னால் படையினரை ஏற்றிச் சென்ற வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. விடுமுறையில் சென்ற படையினரை பேருந்துக்காக ஏற்றிச்சென்றபோது அதிகாலை 5.30 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்து தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-ரி3)

## அரச தலைவர் விசாரணை...

குழுவின் பதவிக் காலம் இந்த மாதம் 18ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரவுள்ள நிலையில், அரசதலைவரின் கோரிக்கைக்கமைய, இதன் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி வரை இதன் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான சிறப்பு வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதியிலிருந்து 2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்காக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் ஜனவரி மாதம் 16ஆம் திகதி இந்த விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. (ம-22)

## அரச...

உடையும். இது உறுதி.' இவ்வாறு தெரிவித்தார் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ராதேவி வன்னியாராச்சி.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறக்க பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் எவ்விதத்திலும் சம்மதம் தெரிவிக்கமாட்டார்கள். எந்தவொரு வேட்பாளர் களமிறங்கினாலும் பொதுமக்கள் முன்னணிக்கு அது சவாலாக இருக்காது. அரச தலைவர் தேர்தலில் ஐக்கியத் தேசியக் கட்சி துண்டுதுண்டாக உடையும். இது உறுதி. ஏனெனில், அந்தக் கட்சிக்குள் மூவர் வேட்பாளர்களாகக் களமிறங்க ஆசைப்படுகின்றார்கள். இதனால் இப்போதே அந்தக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன' என்றார். (ம-22)

## மூடி மறைக்...

எமது சாட்சியங்களை வழங்க மற்றவர்கள் மாதிரி நாங்கள் பயப்படமாட்டோம். மறைக்கப்பட்ட உண்மைகளைத் தெரிவுக்குழு முன்னிலையில் நாம் அம்பலப்படுத்துவோம்.'

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த வருட இறுதியில் வங்கிக் கடனுக்கான வட்டி வீதம் 12 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக குறைக்கப்படும். இதனால் பெரும் எண்ணிக்கையிலானோர் நன்மையடைவர்.

இந்த வருட ஆரம்பத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 66 ஆயிரம் பேர் இலங்கைக்கு வருகை தந்தனர். ஆனால், உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் சம்பவங்களையடுத்து இந்த எண்ணிக்கை 37 ஆயிரமாகக் குறைவடைந்தது. இருப்பினும், இதன் பின்னர் அரசு முன்னெடுத்த துரிதமான வேலைத் திட்டத்தின் காரணமாக ஜூன் மாதத்தில் இந்த எண்ணிக்கை 63 ஆயிரமாக அதிகரித்தது. இந்த மாத இறுதியளவில் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சமாக அதிகரிக்கும். இதேபோன்று ஆகஸ்ட் மாத இறுதியளவில் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 25 ஆயிரமாக அதிகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது அரசுக்கு எதிரான எத்தகைய சவால்களையும் எதிர்கொள்வதற்கு நாம் தயார். எதிரணியினர் எமது அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்தனர். இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்தின்போது நாடாளுமன்றத்தில் கோரத்தை முன்னெடுப்பதற்குக்கூட எதிர்க்கட்சியினரால் முடியவில்லை. அந்தளவுக்கு எதிரணியினர் வங்குரோத்து நிலைக்குள்ளாகியுள்ளனர்.

நாம் 6 இலட்சம் குடும்பங்களுக்கு சமுர்த்தியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தோம். அதில் நான்கு இலட்சம் குடும்பங்களுக்கு தற்போது சமுர்த்தியை வழங்கிவிட்டோம்.

இதேபோன்று காணி உறுதிப்பத்திரத்தைத் பெற்றுக்கொடுத்தல், ஆசிரியர் நியமனம் வழங்குதல், மகா சங்கத்தினருக்கு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் முதலான அபிவிருத்திப் பணிகள் பலவற்றை முன்னெடுத்துள்ளோம்.

நாங்கள் அபிவிருத்தித் திட்டங்களை வீழ்த்த இடமளிக்கவில்லை. அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக்குள் பூரணப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளோம்.

இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னைய அரசு செய்யவில்லை. முன்னைய அரசைவிட மிகவும் வேகமாக நாங்கள் பல வேலைத்திட்டங்களை செய்து வருகின்றோம். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மாதிரி இனிமேல் எந்தத் தாக்குதல்களும் இந்த நாட்டில் அரங்கேற நாம் இடமளிக்கமாட்டோம். நாட்டு மக்கள் எந்தவித அச்சமும் இன்றி நிம்மதியாக வாழலாம்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியை நாம் அறிந்துவிட்டோம். நாடாளுமன்றத் தெரிவுக்குழு இருக்கின்றது. அங்கு சென்று எமது சாட்சியங்களை வழங்க மற்றவர்கள் மாதிரி நாங்கள் பயப்படமாட்டோம். மறைக்கப்பட்ட உண்மைகளைத் தெரிவுக்குழு முன்னிலையில் நாம் அம்பலப்படுத்துவோம்' என்றார்.

காணி மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக, நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்துல்லா மஹ்ரூப், எம்.எஸ்.தௌபீக், கி. துரைரெட்ணசிங்கம், இம்ரான் மஹ்ரூப், சந்தித் சமரசிங்க மற்றும் அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-22)

## சிங்களவர்களுடன்...

துப்புவோம்' என்று நாடாளுமன்றத்திலேயே முகத்துக்கு முகம் தன்மான முரசு கொட்டியவர் அவர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

அமிர்தலிங்கத்தின் நினைவஞ்சலி நிகழ்வுகள் நேற்று வலி.மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் தலைமையுரையாற்றும்போதே சரவணபவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாறு என்று ஒரு நூல் தொகுக்கப்படுமானால், அதில் அமிர்தலிங்கத்துக்கென்று தனித்ததோர் இடம் இருக்கும். ஈழத்தில் தமிழர்களின் உரிமைக்காக மக்கள் மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் குரல்கொடுத்ததோடு மட்டுமல்லாமல் இந்தியாவுக்குச் சென்று இந்திய ஆட்சியினரின் உயர் மட்டத்திலும் மக்கள் தலைவர்கள் மத்தியிலும் தமிழ்நாட்டுத் தமிழர்கள் மத்தியிலும் ஈழத்தில் நடக்கும் உண்மைப் போராட்டத்தின் பாங்கை தனது பாணியில், தனக்கே உரித்தான தன்மையுடன் எடுத்துரைத்து ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் நியாயத்தின் பலத்தை நிலைநாட்டினார். அமிர்தலிங்கம் ஈழத் தமிழர்களுக்காக தொண்டு செய்தார் என்பதற்கு அடையாளமே, சிங்கள வெறியர்கள் எந்த அளவுக்கு அவரை வெறுத்தார்கள் என்பது தான் சரியான அளவுகோலாகும். எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடிய ஒருவருக்கு எதிராக ஆளும் கட்சி நம்பிக்கையிலாத் தீர்மானம் கொண்டு வந்தது என்பது உலக ஜனநாயக வரலாற்றில் கேள்விப்படாத ஒன்றாகும். இலங்கையில் அமிர்தலிங்கத்தின் விடயத்தில் இது நடந்தது.

செல்வா வழியில் ஜனநாயக வழிக்கு உட்பட்டு ஈழத் தமிழர்களுக்கான உரிமைகளை ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஈட்டிட முடியும் என்ற நம்பிக்கையில் போராடியவர்தான் அமிர்தலிங்கம். தனிஈழம்தான் விடிவு என்ற முடிவுக்குப் பின்னர் வந்தார். 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் நாள் தமிழீழப் பகுதியான வட்டுக்கோட்டையில் உள்ள பண்ணாகத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் விடுதலை பெற்ற இறையாண்மையுடன் கூடிய மதச் சார்பற்ற தமிழர் ஈழமே சிங்களவர் - தமிழர் பிரச்சினைக்கு ஒரே நிரந்தரத் தீர்வு என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாடு நடந்த ஊர் தான் அமிர்தலிங்கம் பிறந்த பண்ணாகம். கடைசிவரை ஈழத் தமிழர்களுக்காக களத்தில் நின்றார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக பரிணமிக்க அடிப்படையைக் கொடுத்தவர்களில் அமிர்தலிங்கமும் ஒருவர். தமிழீழக் கோரிக்கையையும் அதைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் முன்வைத்தார். 1977ஆம் ஆண்டு வல்வெட்டித் துறையில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் தெளிவாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழ விடுதலைக்காக அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுக்கும் எனவும் இன்னொருபுறம் இளைஞர்கள் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் அதன் மூலம் தமிழீழ விடுதலை சாத்தியம் எனவும் பகிரங்கமாக அறிவித்தார். அந்தக் கோரிக்கைக்கு தமிழ் மக்கள் வழங்கி பேராதரவின் மூலம் அவர் இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரானார். ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரிவினைக்கு எதிராகச் சட்டம் கொண்டுவந்தபோது தமிழீழ விடுதலைக் கோரிக்கையை வலியுறுத்தி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துண்டுப்பிரசுரம் விநியோகிப்பதற்கு தலைமையேற்று வழிநடத்தினார். அதன் காரணமாக பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறை சென்று தமிழ் ஈழக் கோரிக்கையை மக்கள் மயப்படுத்தினார்கள்.

அதுமட்டுமன்றி 1978ஆம் ஆண்டில் அரசமைப்புக்கு விசுவாசமாக கையெழுத்து வைக்க மறுத்து நாடாளுமன்றப் பதவிகளைத் துறந்தனர். இந்த நடவடிக்கையானது உலக அரங்கில் தமிழீழக் கோரிக்கையை வலியுறுத்தும் ஆழமான முன்னெடுப்பாக அமைந்தது. தொடர்ந்தும் அமிர்தலிங்கம் தமிழீழ விடுதலைக்காக தன்னாலான அர்ப்பணிப்புக்களை வழங்கினார். இதன்காரணமாக இலங்கையில் உயிர் ஆபத்தான நிலையை எதிர்கொள்ள வேண்டி வந்தது. எனவே இலங்கையில் இருந்து சென்று இந்தியாவில் வாழ வேண்டிய துரதிஷ்டமான நிலமை ஏற்பட்டது.

அங்கிருந்து கூட இந்திராகாந்தியுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பார்த்தசாரதி மூலம் இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுக்கான பல முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பிடிவாதமான பேரினவாதப் போக்கால் அத்தனை முயற்சிகளும் தோல்வியடைந்தன. அதனால் அவரின் அர்ப்பணிப்பு தமிழ் மக்களின் உரிமைக்களுக்கான செயற்பாடுகள் அர்த்தமற்றவையாக்கப்பட்டன. எனினும் கூட அவர் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலம் தொட்டு சாவு வரை அவரும் அவருடைய பாரியார் மங்கையர்க்கரசி அம்மையாரும் தமிழ் மக்களின் நலன்களுக்காக தியாக மனப்பான்மையுடன் சேவை செய்தனர் என்பதை எவரும் மறந்துவிட முடியாது. என்றும் அவருடைய நாமம் தமிழ் மக்கள் மத்தியில் உறுதியாக நிலைபெற்றிருக்கும் என்பதை தெளிவாகவே கூறிவைக்க விரும்புகிறேன் - என்றார். (ம-21)

## மைத்திரிக்கு...

சஜித் பிரேமதாச, அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்க ஆசைப்படுகின்றார்? இவரை எப்படி நாம் நம்புவது?' இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அமைச்சரான சஜித் பிரேமதாச ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக இருந்தாலும், இவர் சகல சந்தர்ப்பங்களிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே செயற்படுகின்றார். இவர் அரச தலைவரின் தேவைகளையே நிறைவேற்றி வருகின்றார். அரச தலைவர் கூறும் விடயங்களைத்தான் இவர் ஏற்றுக்கொள்கின்றார். இப்படிப்பட்டவர்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்க ஆசைப்படுகின்றார். இவரை எப்படி நாம் நம்புவது?

இதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிட ஆசைப்படுகின்றார். தனக்கு வாக்குகள் தேவை என்பதற்காகச் சிறைச்சாலையில் உள்ள மனிதர்களைத் தூக்கில் போட அவர் முயற்சிக்கின்றார். சாவுத் தண்டனைக்கு எதிராகவே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. அதேநிலைப்பாட்டில்தான் நாங்களும் உள்ளோம்' என்றார். (ம-22)

## 'வடமராட்சி...

பயணம் மேற்கொண்டு செயற்திட்டம் குறித்தும் செயற்திட்டத்தின் தற்போதைய நிலமை குறித்தும் ஆராய்ந்தனர்.

பொறியியலாளர் குகனேஸ்வரராஜாவால் முன்மொழியப்பட்டு பொறியியலாளர் ஏ.டி. எஸ்.குணவர்த்தனவால் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டு இதுவரையும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கும் 'வடமராட்சி களப்பு' குடிதண்ணீர்த் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நிதியுதவி வழங்கவேண்டுமென்று ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அமைச்சர் கௌரவ மனோ கணேசனைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அமைச்சர் தனது தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய விவகார அமைச்சினூடாக இந்த திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான நிதியுதவியினை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

இந்தச் செயற்திட்டம் தொடர்பாக விளங்கிக் கொள்ளும் நோக்கிலும், செயற்திட்ட பகுதியினை நேரடியாக கண்காணிக்கும் நோக்கிலும் அமைச்சர் தொண்டமனாறு பகுதியில் அமைந்துள்ள செயற்திட்ட அலுவலகத்துக்கு நேற்றுச் சென்றார். அவருக்கு இந்தத் திட்டம் தொடர்பாக அதிகாரிகள் விரிவான விளக்கத்தை வழங்கினார்கள்.

இந்த திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு தனது அமைச்சினூடாக முழு நிதியினையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன் என்று அமைச்சர் அங்கிருந்த அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஆளுநரின் செயலர், யாழ் மாவட்ட செயலர் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ம-26)



இந்தியாவின் தமிழகத்தில் நிலவும் தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாகச் சென்னைக்குத் தொடருந்து மூலம் குடிநீர் கொண்டு செல்லப்பட்டது. ஒரு தடவையில் இரண்டரை லட்சம் லீற்றர் தண்ணீரைக் கொண்டுசென்ற குறித்த தொடருந்து வாழை, தோரணம், மாலைகள் சகிதம் அலங்கரிக்கப்பட்டு வந்த காட்சி இது.

# துருக்கி மீது பொருளாதாரத் தடை அமெரிக்கா அதிரடியாக முடிவு

வோஷிங்டன், ஜூலை 15

ரஷ்யாவிடம் இருந்து 'எஸ்400' ரக ஏவுகணைத் தடுப்புக் கவன்களைக்கொள்முதல்செய்ததால் துருக்கி நாட்டின்மீது அடுத்த வாரத்துக்குள் பொருளதாரத் தடை விதிக்க அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தீர்மா னித்துள்ளார். துருக்கிநாட்டின்வான் எல்லையைப் பாதுகாக்கும் வகையில்ரஷ்யாவிடம்இருந்து அதிநவீனஎஸ்400ஏவுகணைகளைத் தடுப்புக் கவன்களைக் கொள் முதல் செய்வதற்குத் துருக்கி அரசு ஒப்பந்தம் செய்தது.



இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்தஒப்பந்தத்தைத்தொடர்ந்தால் எவ் 35 ரக போர் வானூர்தித் தயாரிப்பில் துருக்கிக்கு அளித்துவரும் முன்னுரிமைநீக்கப்படும்என்றுட்ரம்ப் தெரிவித்தார். அத்தோடு இந்த ஒப்பந்தத்தை நீக்குவதற்கு ஜூலை 31ஆம் திகதிவரை அவகாசம் வழங்கினார். எவ்35ரகபோர்வானூர்தித்தயாரிப்புத் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிக்காகஅமெரிக்காவுக்குச்சென்றதுருக்கி நாட்டுவிமானிகளைஅமெரிக்காவில் தங்கவிட மாட்டோம் எனவும் அவர் எச்சரித்தார்.

ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்களை வாங்கும் நாடுகளின்மீது விதிக்கப்படும் பொருளாதாரத் தடை துருக்கி மீதும்விதிக்கப்படும்எனவும்குறிப்பிட்டார்.

இந்தநிலையில், ரஷ்யாவிடம்செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி எஸ்400 ஏவுகணைகளைத் தடுப்புக் கவன்களில் முதல் கவனை கடந்த சனிக்கிழமை துருக்கிபெற்றது.

இதனால் துருக்கி நாட்டின்மீது அடுத்த வாரத்துக்குள் பொருளதாரத் தடை விதிக்க அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்தீர்மானித்துள்ளார்.

## மாட்டுக் கறி சூப் சாப்பிட்டதாக முகநூலில் பதிவிட்டவர் மீது தாக்குதல்





நாகபட்டினம், ஜூலை 15

இந்தியாவின் நாகபட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அதே பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் தாக்கினர். தாக்கப்பட்டவர் பொலிஸில் முறை யிட்டார்.

மாட்டு இறைச்சியால் செய்யப்பட்ட சூப்சாப்பிட்டதாகமுகநூலில்பதிவிட்டதாலேயேஅவர்தாக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக நான்கு பேரைக் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் மேலும்தெரிவித்தனர். இந்தச்சம்பவம்தொடர்பாகமேலும்தெரியவருவதாவது:

நாகபட்டினம் மாவட்டத்தில் உள்ள கீழ்வேளூரில் பொரவச்சேரி பெருமாள்கோவில்வீதியைச்சேர்ந்தவர்முகமதுபைசான்(வயது24). இவர் தனது முகநூல் பக்கத்தில் இரண்டு ஒளிப்படங்களைப் பதிவிட்டார். அவற்றில் அவர் சூப் சாப்பிடுவது போன்ற காட்சி இடம்பெற்றது. 'ஆயிரம்தான் சொல்லு மாட்டுக் கறி மாட்டுக் கறி தான்யா....' என்றும் அவர் அதில் எழுதியிருந்தார்.

இந்தநிலையில்அன்றையதினமேஅவரைஅந்தப்பகுதிஇளைஞர்கள் சிலர் தாக்கினர். இந்த முகநூல்பதிவைப்பார்த்து ஆத்திரமடைந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே பைசானைத் தாக்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சீனி மிகுந்த பானங்கள் புற்றுநோயை அதிகரிக்கும்

பாரிஸ், ஜூலை 15

சீனிமிகுந்தபானங்கள், பழரசங்கள், கார்பனேட் செய்த பானங்கள் உள்ளிட்டவை, புற்றுநோய் ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கச் செய்யும் என்று பிரான்ஸ் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். பிரிட்டன் மருத்துவ இதழ் வெளியிட்டுள்ள ஓர் ஆய்வு முடிவில் இது தெரிய வந்துள்ளது.

ஐந்துஆண்டுகளாகஒருலட்சம்பேரைஆய்வுக்குட்படுத்திய முடிவே இது. சீனி மிகுந்த பானங்கள் புற்றுநோயை அதிகரிக்கச் செய்தாலும், குருதியில் சீனியின் அளவில் ஏற்படும் மாற்றம் தான் இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

அத்தோடுஇதைஉறுதிசெய்கின்றஆதாரங்கள் போதுமான அளவுக்கு இல்லை என்றும், இதுகுறித்து இன்னும் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் அதே விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



## இன்றைய நாள்

**மேடம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பொருட்கள் பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்தவும். பிள்ளைகளால் உதவி உண்டு..

**இடபம்:** பெரியவர்களின் வழிகாட்டு தலை ஏற்று நடப்பீர்கள். தொழில், வியாபாரம் புதிய உத்தியால் செழித்து வளரும். உபரி வருமானம் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு தேடி வரும். உற்சாகமுடன் பணிகளை திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிப்பால் லாபம் உயரும்.

**கடகம்:** சிலரது பேச்சால் வருத்தம் ஏற்படலாம். அடுத்தவர் விஷயத்தில் தலையிட வேண்டாம். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் முயற்சி தேவைப்படும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

**சிம்மம்:** திட்டமிட்டபடி செயலை நிறைவேற்றுவது நல்லது. அறிமுகமில்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் திடீர் பிரச்னை உருவாகலாம்.

**கன்னி:** நீண்டநாள் தாமதமான செயல் கூட நிறைவேறும். உங்களின் தனித்திறமையை அனைவரும் பாராட்டுவர். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் உயரும்.

**துலாம்:** நண்பர்களால் தொந்தரவுக்கு ஆளாகலாம். தாமதித்த பணிகளை உடனடியாக செய்து முடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இயங்கும். மிதமான பண வரவு கிடைக்கும். உடல்நலனுக்கு ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** சந்தோஷ முகத் தோற்றம் பெறுவீர்கள். மனதில் இருந்த திட்டம் செயல் வடிவம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** அவசரப்பணி ஒன்று உருவாகி அல்லல் தரலாம். கருணை மனம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில் வியாபார நடைமுறை மந்த கதியில் இயங்கும்.

**மகரம்:** கடந்த கால அனுபவத்தை பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். உபரி வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர்.

**கும்பம்:** பரந்த மனதுடன் நண்பர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் உயரும். சுபவிஷய பேச்சில் முன்னேற்றம் உண்டு.

**மீனம்:** அடுத்தவர் மீதான நம்பிக்கை குறையும். தொழில், வியாபாரத்தில் குளறுபடியை சரி செய்வீர்கள். முக்கியச் செலவுக்கு தேவையான பணம் கிடைக்கும். வெளியூர் பயணத்திட்டத்தில் திடீர் மாறுதல் இருக்கும் .

# இங்கிலாந்து உலகச் சம்பியன் நியூசிலாந்து விடாப்போராட்டம்!

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நியூசிலாந்தை திரில் நிலையில் வீழ்த்தி கிண்ணம் வென்றது இங்கிலாந்து அணி.



நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நியூசிலாந்தின் ஆரம்ப வீரர்களாக கப்ரில் மற்றும் நிக்கொல்ஸ். கிரிக்கெட்டின் மெக்கா என அழைக்கப்படும் லோட்ஸ் மைதானத்தின் 'கிறீன் பிட்ச்' இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சை மேலும் எழுச்சிபெற வைத்தது. ஆச்சர், வோக்ஸ் வேகப்பந்து வீச்சுக் கூட்டணி ஆரம்பத்தில் மிரட்டியது. குறிப்பாக நிக்கொல்ஸ் மிகமிக மந்தமாக விளையாடினார். ஓட்டச் சராசரியைக் கருத்தில்கொண்டு அதிரடிகாட்ட எத்தனித்தார் கப்ரில். கப்ரிலை 19 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் வோக்ஸ்.


வில்லியம்சன் - நிக்கொல்ஸ் இணை இங்கிலாந்துக்கு எதிராகக் கடுமையாகப் போராடியது. நிக்கொல்ஸ் படிப்படியாக அடித்தாட எத்தனித்தார். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது நியூசிலாந்து. அணி 103 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியம்சன். அடுத்த சில நிமிடங்களில் நிக்கொல்ஸின் இன்னிங்ஸும் முடிவுக்கு வந்தது. ரெய்லர் பதின்மத்தைத் தாண்டவில்லை. லாதம் மத்திய வரிசையைப் பலப்படுத்தினார். அவர் 47 ஓட்டங்களுடன் வோக்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க 241 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து அணி.

பந்துவீச்சில் வோக்ஸ், பிளங்கட் இருவரும் தலா 3 இலக்குகளையும், ஆச்சர், வூட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணியும் நியூசிலாந்தின் பாதையிலேயே பயணிக்கத் தலைப்பட்டது. றோய் 17 ஓட்டங்களுடன் ஹென்றியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்தின் இருபெரும் தூண்களான ரூட் 7 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் மோர்கன் வெறும் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். 86 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்து தவித்தது இங்கிலாந்து அணி. அதன் பின்னர் பட்லர், ஸ்ரோக்ஸ் இணைந்து இங்கிலாந்தைத் தூக்கி நிறுத்தினர். ஸ்ரோக்ஸ் நிதானத்தை வெளிப்படுத்த பட்லர் அடித்தாட இங்கிலாந்தின் ஓட்டங்கள் நியூசிலாந்துக்கு நிகர் நின்றது. இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. 60 பந்துகளில் 59 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் பட்லர்.

ஸ்ரோக்ஸ் ஒரு முனையில் நிலைத்துநின்ற போதிலும் மறுமுனையில் இலக்குகள் சரிந்து கொண்டிருந்தன. இறுதியில் 241 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து அணி. ஸ்ரோக்ஸ் 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.





பந்துவீச்சில் பேர்குசன், நீஸ்கம் இருவரும் தலா 3 இலக்குகளையும், ஹென்றி, கிரான்ட் ஹோம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

**சுப்பர் ஓவர்**

இரண்டு அணிகளும் தலா 241 ஓட்டங்களைப் பெற்றமையால் சுப்பர் பந்துப்பரிமாற்றத்தில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களாக ஸ்ரோக்ஸ் மற்றும் பட்லர் இருவரும் களமிறங்கினர். 15 ஓட்டங்களை விளாசியது அந்த இணை. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணியும் 15 ஓட்டங்களே பெற்றது. இதனால் அடிக்கப்பட்ட பவுண்டரிகளின் எண்ணிக்கையின்படி இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

(ம)

**PLACES SUITABLE FOR OFFICE PURPOSE / SUPER MARKET**

A place with show rooms, parking & other facilities available in the center of the town.4000 square feet in area (2000 Square show rooms + 2000 square store rooms)

**MINI SUPER MARKET WITH COFFEE BAR**


In A9 area, with 1800 square feet with parking facilities & show rooms at A9 road Navatkuly.

**TOURS AND TRAVELS / OFFICE PURPOSE**

A place for having travels in the center of the town with on facilities is for rent. 500 square feet in area.

**CONTACT: 077 730 4545 / 076 138 0212**

## மரண அறிவித்தல்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**விஜயசுந்தரம் ஜீவன்குமார்**

அவர்கள் 14.07.2019 அன்று காலமாகிவிட்டார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.**

128, யாழ்வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 599 3935**

## யாழ்நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை

* சாரதி
* பணவசூலிப்பாளர்கள்
* பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
* சுத்திகரிப்பாளர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிவரக்கோவையுடன் **15.07.2019** திங்கட்கிழமை கீழ் உள்ள முகவரிக்கு காலை - **9.30** - பி.ப. **2.00** வரை நேரில் சமூகம் தரவும்.

**ES Printers**

இல.359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774

2019 தொழினுட்ப மாணவர்களுக்கான

**மாபெரும் விசேட செயலமர்வு**

| காலம் : ஜூலை 15 , 16 | காலம் : ஜூலை 19 , 20, 21 |
|---|---|
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம்(7), ஊடகக்கல்வி |

* அனைத்துப் பாடங்களுக்கும் இம்முறை பரீட்சையில் எதிர்பார்க்கும் வினாக்கள் அடங்கிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் வழங்கப்படும்.
* எதிர்பார்க்கை பாடப்பரப்புக்களின் விடயங்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
* பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.

முற்பதிவுகளுக்கு:- 077 248 7774

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**

* பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
* அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
* யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org

**021 222 8093** 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் சம்பியனானது

யாழ்., ஜூலை 15

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கு இடையில் நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட தெரிவு அணி வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட தெரிவு அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாண மாவட்ட தெரிவு அணி வெற்றிபெற்றது. (ம-23)

## வீடு வாடகைக்குண்டு

A9 வீதி, சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரி ஐயா கடையடியில் 3 அறைகள், ஒரு இணைந்த குளியலறை, சமையலறை மற்றும் வாகன வசதியுடன் கூடிய புதிய வீடு வாடகைக்குண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**076 275 4280**

## A/L ஊடக கற்கை

**விசேட வழிகாட்டல் கருத்தரங்கு 2019**

* கலைப்பிரிவு
* தொழில்நுட்ப பிரிவு

மாணவர்களுக்கானது.

**காலம் : 17, 18, 19 (யூலை) 2.00 pm**

**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி, யாழ்நகர்.


**தொடர்பு:077 395 6158**

வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.

## மரண அறிவித்தல்

**அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதன்**

**குருத்துவ திருநிலைப்படுத்தல் 1970.04.06**



மண்ணுலகில் 14.12.1945 விண்ணுலகில் 11.07.2019

யாழ். மறை மாவட்ட குருவாகிய அருட்பணி. ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளார் கடந்த 11.07.2019 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் டச் வீதி உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சாமிநாதன் குருசாமி பத்திநாதன் , செலின் அன்னரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் ஜோசபின், ஜோசப், ஜோய், ஜோன், ஜெசிமார்கிரட், ஜெனட், ஜெபம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானராஜ் , காலஞ்சென்ற செல்வ ராணி, சபாநாதன், காலஞ்சென்ற ரஞ்சிதிரேசா, ரவீந்திரன், விஜி சாமுவல், காலஞ்சென்ற தேவா, சாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அருட்தந்தையின் நல்லடக்கத் திருப்பலி யாழ். மறை மாவட்ட ஆயர் தலைமையில் யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் இன்று (15.07.2019) திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்குஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## VACANCIES FOR SECRETARY & RECEPTIONIST



We are one of the leading Institute in Jaffna. We are looking for a committed and enthusiastic individual with the ability to work independently to join our team.

### Secretary

* Minimum 1 year experience in similar position
* An excellent command of written and spoken English
* Good knowledge of MS Windows/Excel & e-mails
* The Willingness & eagerness to learn and pursue a career in the future
* Retired secretary also will be considered

### Receptionist

* Minimum 1 year experience in similar position
* An excellent command of spoken English
* Ability to work under pressure

Those who are interested, Send your CV along with details of two non-related refrees within 7 days to:

jaffnavacancy@gmail.com

## கருத்தரங்குகள்

மாகாண முகாமைத்துவ உதவியாளர்
செவ், சனி , ஞாயிறு 9.00 - 3.00

மாலை நேர பிரிவு
செவ், புதன், வியாழன் 3.00 - 6.00

பதிவாளர், புள்ளி விபரவியலாளர்
செவ், சனி , ஞாயிறு 9.00 - 4.00

**தொடர்புகளுக்கு 076 688 3394**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

* அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
* கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
* நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.

**021 222 6113**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.